# அரசு ஊழியர்

ஏப்ரல் 2017

மலர் : 38 இதழ் : 4

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக வெளியிடுபவர் : இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல், மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம், எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ், 2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை, சென்னை - 600 015.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


**சூடா ஒரு கோப்பை சூப்**

## விதையின் கதை

வளமான நிலத்தில் இரு விதைகள் அருகருகே நடப்பட்டன.

முதல்விதை சொன்னது, "நான் எனக்குக் கீழே ஆழமாக எனது வேர்களை செலுத்த விரும்புகிறேன். பூமிக்கு மேலே எனது தளிரை தள்ள விரும்புகிறேன். சூரிய ஒளியை என் முகத்திலும், அதிகாலைப் பனியை எனது இதழ்களிலும் உணர விரும்புகிறேன்". எனவே அது வளர்ந்தது.

இரண்டாவது விதை சொன்னது, "எனக்கு பயமாயிருக்கிறது. எனக்குக் கீழே வேர்களை செலுத்தினால் இருட்டுக்குள் எதை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரியவில்லை. எனக்கு மேலே உள்ள கடினமான நிலத்தின் வழியே எனது மென்மையான இதழ்களை வெளித்தள்ளினால் அவை சேதமடையக் கூடும். ஆடு என்னை மேய்ந்துவிடலாம். பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படும் வரை காத்திருப்பதுதான் நல்லது". எனவே அந்த விதை காத்திருந்தது.

இரைதேடி நிலத்தை கொத்திக் கிளறிக்கொண்டு வந்த ஒரு கோழி, காத்திருந்த அந்த விதையைக் கண்டது. கொத்தித் திண்றது.

இந்த இரண்டு விதைகளில் நீங்கள் யார்?

ஆனால் ஒன்று, 'ரிஸ்க்' எடுக்கவும் போராடவும் தயங்குபவர்கள் வாழ்க்கையால் விழுங்கப்படுவோம்!

# பூஜ்ஜியத்திற்குள்ளே நடக்கும் ராஜ்ஜியத்தில் வஞ்சிக்கும் போக்கு கிஞ்சிற்றும் மாறவில்லை!

என்னதான் அரசு ஊழியர்கள் தாங்கள் பணி செய்யும் அரசாங்கத்திற்கு எஜமான விசுவாசத் தோடு உழைத்தாலும், எந்த அரசாக இருந்தாலும் அவை தம் ஊழியர்களை நடத்தும் அடிமைத்தனப் போக்கு மாறாது என்பதற்கான இன்னொரு ஆதாரம் தான் 2017-18ம் ஆண்டிக்கான தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை.மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகளின் அடிப்படை யில் மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம் மாற்றி அமைக்கப்பட்டுள்ள பின்னணியில் தமிழ்நாடு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை மாற்றி அமைத்திடும் பணியை மேற்கொள்ள தமிழக அரசால் ஐந்து நபர் அடங்கிய அலுவலர் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்து இந்த நிதி நிலை அறிக்கையில் பொத்தாம் பொதுவாக கூறப்பட் டுள்ளதே தவிர குறிப்பான நிதி எதுவும் வரை யறுக்கப்படவில்லை என்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

## சரித்திரத்தின் தரித்திர சுழற்சி?

சென்ற முறை தமிழக அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தில் ஓராண்டு நிலுவைத் தொகை மறுக்கப்பட்டது. அது 1.1.2006 முதல் கருத்தியல் ரீதியாகவும், 1.1.2007 முதல் பணப்பலனுடனும் அமல்படுத்தப்பட்டது என்பதையும் ஏற்கெனவேஅரசின் கவனத்திற்கு பலமுறை அரசுஊழியர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் கொண்டு சென்று நிலுவைத் தொகை யினை கேட்டபோது, அரசுத்தரப்பில், அடுத்த ஊதிய மாற்றத்தில் காலதாமதமோ, கருத்தியல் ரீதியான கணக்கீடுகளோ இல்லாமல் அலுவலர் குழுவின் பரிந்துரைகள் உடனடியாக அமல் படுத்தப்படும் என்றும், பிந்தைய ஆண்டுகளில் தவணைத்தொகை வழங்க வேண்டிய அவசியம் இருக்காது என்ற உறுதிமொழியும் வழங்கப் பட்டது. இந்தநிதிநிலை அறிக்கையை நோக்கும் போது அந்த உறுதிமொழி காற்றில் பறக்கவிடப் பட்டுவிட்டது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. ஊதிய மாற்றத்திற்கு கண்டிப்பாக ஒரு கணிசமான தொகை தேவைப்படும் என்பது அரசுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் அரசு அதை லாவகமாகத் தவிர்த்திருப்பதைப்

பார்க்கும்போது 2006 ஊதிய மாற்றம் 2007ம் ஆண்டில் பணப்பலனுடன் அமல்படுத்தப்பட்ட சரித்திரம் மீண்டும் ஒருமுறை தரித்திர சுழற்சி செய்கிறதோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

## விதி எண்.110ல் சதி என்னும் 111

சென்ற ஊதிய மாற்றத்தின்போது நிகழ்ந்த தாமதங்களையும் முரண்களையும் முதல்வரும், நிதியமைச்சரும் ஒப்புக்கொண்டு இனி அமைக்கப் படும் ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவின் பரிந்துரைகள் காலதாமதப்படுத்தாமல் வழங்கப் படவும், அரசாணைகளில் முரண்பாடுகள் இல்லாமல் வெளியிடப்படவும் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்கவேண்டிய சூழ்நிலை எழாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பேரவையில் பட்ஜெட் வரவு -செலவு திட்ட உரையிலும் (13-02-2016), தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழான அறிக்கையிலும் (19-02-2016) தெரிவித்தனர். ஆனால் தற்போதைய நிதிநிலை அறிக்கையை பார்க்கும்போது அவை வெறும் சம்பிரதாய சப்பைக்கட்டுகள் என்பதும் விதி எண்.110ல் வெளியிடப்படும் அறிவிப்புகள் அனைத்தும் சதிகளின் தொகுப்பே என்பதும் தீர்க்கமாகியுள்ளது.

## காரிய சித்தியா? கழுத்தறுக்கும் யுக்தியா?

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது ''அதிமுக அரசு அமைத்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்படும்'' என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார். அந்த ஆண்டில் அதிமுக அரசமைத்தும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் தமிழ்நாடு அரசுஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் சேர்ந்து போராட்டம் நடத்தினோம், இறுதியில் ஆட்சியின் ஐந்தாண்டுகள் முடியும் தருவாயில் கடந்த 19.02.2016ஆம் தேதி ஜெயலலிதா அவர்கள், தமிழக சட்டப்பேரவையில் விதி எண்,110ன் கீழ் அறிக்கை வெளியிட்டு அதில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை அளிக்க சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைத்து, அது மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை அளிக்கும் படியும் வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். ஆனால், அந்த வல்லுநர் குழுவின் காலவரையானது இதுவரை நான்குமுறை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது இது 25-03-2017 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது, இது பழைய பென்சன் திட்டத்தை உண்மையில் கொண்டு வருவதற்கான காரிய சித்தியா? அல்லது கால விரயம் செய்து அரசு ஊழியர்களின் கழுத்தறுக்கும் யுக்தியா? என்கிற சந்தேகமும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இதுபற்றியும் இந்த நிதிநிலை அறிக்கையில் எவ்வித அறிவிப்பும் இல்லை,

## மறுக்கப்பட்டுள்ள இடைக்கால நிவாரண நிதி, இழைக்கப்பட்டுள்ள இன்னொரு அநீதி!

மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் 1.1.2016 முதல் அறிவிக்கப்பட்டு அவர்கள் அதற்கான புதிய ஊதிய மாற்றங்களையும், புதிய ஊதிய மாற்றத்திற்கான நிலுவைத் தொகைகளையும் பெற்றுவிட்ட நிலையில் தமிழக அரசு ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவை 22.2.2017ம் தேதி, அதாவது 14 மாத கால தாமதத்தில் அமைத்துள்ளது. அலுவலர் குழு தன்னுடைய பரிந்துரைகளை விக்க 4 மாதங்கள் காலவரை நிர்ணயிக்கப் பட்டுள்ளது, அது பரிந்துரைகள் வழங்கிய பின்னர் அரசு, அரசாணைகள் வெளியிட குறைந்த பட்சம்கூடுதலாக ஒரு மாதகாலம் தேவைப்படலாம். அப்படி ஒரு நிலை வந்தால் முழு நிலுவைத் தொகையையும் ஊழியர்களுக்கு ஒரே நேரத்தில் கொடுப்பதில் அரசுக்கு நிதிச்சுமை ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 01.01.2016 முதல் 20 சதவீத ஊதியத்தை வழங்கிட வேண்டும் எனவும் கேட்டிருந்தோம். இந்த பட்ஜெட் உரையில்இது பற்றிய அறிவிப்பு எதுவும் காணக்கிடைக்கவில்லை. இதன்மூலம் தமிழக அரசு ஊழியர்களின் வாழ்வாதாரக் குரல்வளை நெரிக்கப்பட்டுள்ளது.

## காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் தவிர வேறு வழியில்லை!

கோரிக்கையும் குறிப்பாக நிதி சார்ந்த கோரிக்கைகள் எதுவும், அவை ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட்டிருந் தாலும், வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும்

அல்லது அறிவிப்புகளே (விதி எண்110) கூட வெளியிடப்பட்டிருந்தாலும் எதையும் இந்த அரசு நிறைவேற்ற முன்வரப்போவதில்லை என்பது இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும் நிதியில்லை, எப்போது கேட்டாலும் கஜானாவில் பணமில்லை என்ற பதில்கள்தான் அரசிடமிருந்துவருகிறது. அறிவிப்புகள் வெறும் காகிதங்களாக இருப்பதும், அறிவிப்புகளுக்குள் நம்பிக்கைத் துரோக நயவஞ் சகங்கள் ஒளிந்திருப்பதும், அரசு ஊழியர்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து தொடர்ந்து கண்டுவரும் காட்சிகளாகும். எவ்வளவுதான் போராடினாலும், பொறுமை காத்தாலும் அரசு ஊழியர்களை வஞ்சிக்கும் போக்கு கிஞ்சிற்றும் மாறவில்லை அரசுக்கு. அரசு ஊழியர்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அந்த எல்லை எதுவென்று அரசுக்கு புரிய வைக்கும் நேரம் வந்துவிட்டது. பூஜ்ஜியத்திற்குள்ளே ஒரு ராஜ்ஜியம் நடப்பதும் அந்த ராஜ்ஜியத்தை நம்பி அரசு ஊழியர்கள் இனியும் காத்திருப்பதும் வீணே. எனவே அரசு ஊழியர் சங்கம் ஏற்கெனவே அறிவித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டதை அதிதீவிரமாக முன்னெடுக்க வேண்டிய அவசர அவசியம் எழுந்துள்ளது. அதனால், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைமையில் உள்ள 64 துறைவாரிச் சங்கங்கள் ஒன்றிணைந்து 08-04-2017 அன்று மாவட்டத் தலைநகரங்களில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடும், 15-04-2017 அன்று திருச்சி நகரில் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடும், 25-04-2017 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டமும் அரசின் பிடிவாத இரும்புக் கதவுகளை உடைத்தெறிந்து, தடுக்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் மீட்டெடுக்கும். ❖

# தோழர் பி.கிருஷ்ணன் நினைவு தின கருத்தரங்கம்






தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில தலைவர் பி.கே. என அன்போடு அழைக்கப்படும் பி.கிருஷ்ணன் நினைவு தின கருத்தரங்கம் மதுரை மாவட்டத்தில் மாவட்ட மையக் கட்டிடத்தில் மாவட்டத் தலைவர் மு.முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் ம.தேவேந்திரன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் "புதிய பென்சன் - தமிழக அரசின் செயல்பாடும் அரசு ஊழியர் சங்கத்தின் நிலைபாடும்" என்ற தலைப்பில் புதிய பென்சன் திட்டம் குறித்து விரிவான கருத்துரையாற்றினார். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி நிறைவுரை யாற்றினார். மாவட்டத் தலைவர் முருகன், முன்னாள் மாநிலத் தலைவர் குறித்த தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இறுதியில் மாவட்டப் பொருளாளர் எஸ்.எம்.வேலுமணி நன்றி கூறினார்.

மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கிளை நிர்வாகிகளுடன் 7 பெண்கள் உட்பட 95 பேர் கலந்து கொண்டனர். இதில் வருவாய் கிராம உதவியாளர்கள், அச்சகத் துறை ஊழியர்கள், நெடுஞ்சாலைத் துறை, சாலைப் பணியாளர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் 80சதவீதம் பேர் புதிய பென்சன் திட்ட ஊழியர்கள் கலந்து கொண்டது கருத்தரங்கின் நோக்க நிறைவை அடைந்தது மிகச் சிறப்பானதாகும். ❖

மேசையிலிருந்து...

# இன்னொரு முறை நிகழ்த்திக் காட்டுவோம்

# இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை!

“உலகம் மிகவும் துன்பப்படுகிறது - கெட்ட மக்களின் வன்முறையால் அல்ல; நல்ல மக்கள் அமைதி காக்கும் காரணத்தால்!”

தற்போது தமிழக அரசியல் களட்திலும் நிர்வாகத்திலும் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது நெப்போலியன் போனபார்ட் சொன்ன இந்த மேற்கோள்தான் தவிர்க்க இயலாமல் நினைவில் வந்து நிற்கிறது.

மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது, அதன் பின்னணியில் தமிழ்நாடு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை மாற்றி அமைத்திடும் பணியை மேற்கொள்ள தமிழக அரசால் ஐந்து நபர் அடங்கிய அலுவலர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை தமிழக முதல்வர் 22.02.2017ஆம் தேதி வெளியிட்டபோது அதில் ‘‘அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் மற்றும் ஏனைய சங்கங்கள் இவ்வலுவலர் குழுவிற்கு ஊதிய விகிதம் ஒய்வூதிய திருத்தம் குறித்த தங்கள் கோரிக்கைகளை அனுப்பி வைக்கலாம்’’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது, ஆனால், அதே தேதியில் வெளியிடப்பட்ட இது குறித்த அரசாணையில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் மற்றும் ஏனைய சங்கங்கள் தங்கள் கோரிக்கையை அனுப்பி வைக்கலாம் என்ற தகவல் குறிப்பாக இடம் பெறவில்லை.

அலுவலர் குழு, ஊதிய மாற்றம் குறித்த தனது பரிந்துரைகளை இறுதிப்படுத்துவதற்கு முன்னர் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களை அழைத்து, விரிவான கலந்துரையாடல் நடத்தி, கருத்தொற்றுமையின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். கடந்த காலங்களில் இத்தகைய ஜனநாயக நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதையும் குறிப்பாக சென்ற ஊதிய மாற்றத்தின்போது அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களை அழைத்துப்பேசாமலும், நாம் கொடுத்த கோரிக்கைகளை பரிசீலிக்காமலும் ஊதிய மாற்றங்கள் செய்யப்பட்டதால் பல்வேறு குறைபாடுகளுடனும் சமச்சீரற்ற ஊதிய உயர்வுகளுடனும் அரசாணைகள் வெளிவந்து ஊழியர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியதோடு, ஊதிய மாற்ற அலுவலர் குழுவால் நிறைவேற்றப்படாத நிலையில் தமிழ்நாடு அரசுஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் போராட்டம் நடத்தினோம், இறுதியில் ஆட்சியின் ஐந்தாண்டுகள் முடியும் தறுவாயில் கடந்த 19.02.2016ஆம் தேதி ஜெயலலிதா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் விதி எண்,110ன் கீழ் அறிக்கை வெளியிட்டு அதில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை அளிக்க திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைத்து அது மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை அளிக்கும் படியும் வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். ஆனால் அந்த வல்லுநர் குழுவின் காலவரையானது இதுவரை நான்கு முறை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இது பழைய பென்சன் திட்டத்தை உண்மையில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுதானா அல்லது காலவிரயம் செய்து அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்ஜிம் செயலா என்கிற சந்தேகமும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மக்கள் நலன் சார்ந்த ஒரு அரசு தன் மக்களுக்கு அறிவிக்கும் நலத்திட்டங்கள் அது எதிர்பார்க்கும் வகையில் முழுமையாக சென்றடைய வேண்டுமென்றால் அந்த அரசாங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் அந்த திட்டங்களை அர்ப்பணிப்பு உணர்வுடன் மக்களுக்கு கொண்டு சென்று சேர்க்கும் மனநிலையில் இருக்க வேண்டும். அதற்கு அரசு அதன் கீழ் பணியாற்றும் அரசு ஊழியர்கள் கேட்கும் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படை தன்மையுடன் அணுகி அவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகளில் உள்ள நியாயதர்மங்களை சீர்தூக்கிப் பார்த்து எல்லோருக்கும் சமச்சீரான வகையில் ஊதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு அரசாணைகள் வெளியிடுவதன் மூலம் அரசு ஊழியர்கள் தங்கள் பணிகளை அதாவது, மக்கள் நலத்திட்டங்களை அதன் கடைசி பயனாளி வரை கொண்டு சென்று சேர்க்கும் பணிகளை மேற்கொள்ள முடியும். அதுபோல் நடவாத போது அவர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடுவதிலேயே காலவிரயங்கள் ஏற்பட்டு, மக்களுக்கு சென்றடைய வேண்டிய திட்டங்களில் சுணக்கம் ஏற்பட்டுவிடக்கூடிய சூழ்நிலைகள் தோன்றிவிடும் என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

சென்ற ஊதிய மாற்றத்தின்போது நிகழ்ந்த தாமதங்களையும் முரண்களையும் மாண்புமிகு முதல்வரும், நிதியமைச்சரும் ஒப்புக்கொண்டு இனி அமைக்கப்படும் ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவின் பரிந்துரைகள்

காலதாமதப்படுத்தாமல் வழங்கப்படவும், அரசாணைகள் முரண்பாடுகள் இல்லாமல் வெளியிடப்படவும் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்கவேண்டிய சூழ்நிலை எழாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பேரவையில் பட்ஜெட் வரவு செலவு திட்ட உரையிலும் (13-02-2016), தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழான அறிக்கையிலும் (19-02-2016) தெரிவித்தார்.

எனவே அலுவலர் குழு ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் அளிக்க வேண்டும் என்றும் பரிந்துரைகளை இறுதிப்படுத்துமுன் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகளை அழைத்துப்பேசி கருத்தொற்றுமையின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொண்டு முரண்பாடுகளற்ற சமச்சீரான ஊதிய மாற்றை வழங்கிட வேண்டும்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது "அதிமுக அரசு அமைந்தால் புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படும்" என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார். 2011-ல் அதிமுக அரசமைத்தும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் போராட்டம் நடத்தினோம், இறுதியில் ஆட்சியின் ஐந்தாண்டுகள் முடியும் தறுவாயில் கடந்த 19.02.2016ஆம் தேதி ஜெயலலிதா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் விதி எண்,110ன் கீழ் அறிக்கை வெளியிட்டு அதில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதி திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை அளிக்க திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைத்து அது மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை அளிக்கும் படியும் வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எனவே, தமிழக அரசு பென்சனுக்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் காலவரையறையை மேலும் நீட்டிக்காமல் அதன் அறிக்கையை பெற்று புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து விட்டு பழைய பென்சன் திட்டத்தை தொடர வேண்டும்.

சென்ற முறை தமிழக அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தில் ஓராண்டு நிலுவைத்தொகை மறுக்கப்பட்டது என்பதையும் அது 1.1.2006 முதல் கருத்தியல் ரீதியாகவும். 1.1.2007 முதல் பணப்பலனுடனும் அமல்படுத்தப்பட்டது என்பதையும் ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு பலமுறை அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் கொண்டு சென்று நிலுவைத் தொகையினை கேட்டபோது அப்போது அரசுத்தரப்பில், அடுத்த ஊதிய மாற்றத்தில் காலதாமதமோ, கருத்தியல் ரீதியான கணக்கீடுகளோ இல்லாமல் அலுவலர் குழுவின் பரிந்துரைகள் உடனடியாக அமல் படுத்தப்படும் என்றும், பிந்தைய ஆண்டுகளில் தவணைத்தொகை வழங்க வேண்டிய அவசியம் இருக்காது என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஆனால் மேற்கூறப்பட்டதற்கு மாறாக தற்போதே 19 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் முழு நிலுவைத் தொகையையும் ஊழியர்களுக்கு ஒரே நேரத்தில் கொடுப்பதில் அரசுக்கு நிதிச்சுமை ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், மத்திய அரசு ஊழியர்கள், ஊதியமாற்ற நிலுவைத் தொகையை வாங்கிவிட்ட நிலையில் தமிழக அரசு ஊழியர்கள் குறைவுபட்ட ஊதியத்துடன் குடும்பத்தை நடத்த சிரமப்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 01.01.2016 முதல் 20 சதவீத ஊதியத்தை வழங்கிட வேண்டும் எனவும் முதல்வர் அவர்கள் இந்த நியாயமான கோரிக்கையை உடனடியாக பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்துகிறோம். மேலும்

சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அரசின் முன் வைக்கப்பட்டுள்ளது.

தரப்படுத்தப்படாத ஊதிய விகிதங்களின் கீழ் பணியாற்றிவரும் சத்துணவு/அங்கன்வாடி/வருவாய் கிராம உதவியாளர்கள்/ஊராட்சி செயலாளர்கள்/ ஊர்ப்புற நூலகர்கள்/தோட்டக்கலை பண்ணை ஊழியர்கள்/வனத்துறை காவலர்கள்/ கணினி இயக்குநர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் தரப்படுத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறையுடன் கூடிய நிரந்தரப்பணி மற்றும் வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்துப் பயன்களையும் வழங்கிட வேண்டும்.

தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதியங்கள் ஒழிக்கப்பட்டு தரப்படுத்தப்பட்ட முறையான ஊதிய நிலைகள் நிர்ணயம் செய்து பணி நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் அரசின் முன் பிரதானப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், அரசோ இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியுள்ளது.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் ஊதிய மாற்றத்திற்கென நிதிகள் எதுவும் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பது ஊழியர்களை வஞ்சிக்கும் செயலில் இறங்கி விட்டது என்பதையே காட்டுகிறது. எனவே, இப்போது நமக்கு போராட்டங்கள் தவிர்க்க இயலாததாகிவிட்டன.

எந்த போராட்டத்தையும் நாம் தேடிச் செல்லவில்லை. அரசின் அலட்சியப் போக்கால் அவை நம் மீது திணிக்கப்பட்டுள்ளன. இப்போது நம் மேற்கொள்ள வேண்டியது வெறும் போராட்டமல்ல சமரசமற்ற போர். சூழ்நிலைகள், நம் போராட்டத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்தும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கியுள்ளன. காலவரையற்ற போராட்டம்

காலத்தின் கட்டாயமாகியுள்ளது. நாட்டில் நாலாபுறமும் நிகழும் போராட்டங்கள் நமக்கு உணர்த்தும் உண்மை யாதெனில் உறுதியான மனவலிமையோடு, கடுமையான போராட்டத்தை, முழுமையான அளவில் நிகழ்த்திக் காட்டினாலொழிய நம்முடைய உரிமைகளை பெறமுடியாது என்பதாகும். அதனால் வேலை நிறுத்தப் போராட்டம் வலிமையான போராட்டமாக நடத்தப்பட வேண்டிய அவசியத்தை நாம் அனைவரும் உணர வேண்டும். அரசு ஊழியர் சங்கம் நடத்திய வேலைநிறத்தப் போராட்டங்களில் இது இன்னொரு வெற்றிகரமான போராட்டமாக அமைவதன் மூலமாகவே நாம் கோரும் உரிமைகள் சாத்தியப்படும்.

உலகம் மிகவும் துன்பப்படுகிறது - கெட்ட மக்களின் வன்முறையால் அல்ல; நல்ல மக்கள் அமைதி காக்கும் காரணத்தால் என்ற நெப்போலியன் போனபார்ட்டின் மேற்கோளை இப்படிச் சொல்லி முடிப்பதே பொருத்தமானதாக இருக்கும் "நாடு மிகவும் துன்பப்படுகிறது - ஆள்பவர்களின் அலட்சியத்தால் அல்ல, அரசு ஊழியர்கள் அமைதி காக்கும் காரணத்தால்!"

எனவே, தோழர்களே மேற்கண்ட உரிமைகளை மீட்டெடுக்க

❖ **மாவட்ட தலைநகரங்களில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு**
**08-04-2017 அன்று மாவட்டத் தலைநகரங்களில்** நடத்துவது என்றும்,

❖ **மாநில அளவிலான வேலை நிறுத்த ஆயத்த மாநாடு**
**15-04-2017 அன்று திருச்சி நகரில்** நடத்துவது என்றும்

❖ **காலவரையற்ற வேலை நிறுத்தம்**
**25-04-2017 ஆம் தேதி முதல்** மேற்கொள்வது என்றும் முடிவு செய்திருக்கிறோம்.

அமைதி காத்தது போதும் தோழர்களே. ஆள்பவர்களின் அலட்சியப் போக்கினை விரட்டியடிப்போம். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை இன்னொரு முறை நிகழ்த்திக் காட்ட களம் காண்போம்! ❖

---

## 15.3.2017-ல் அரசு ஊழியர்கள் பங்கேற்ற

# தமிழகம் தழுவிய பேரணி

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி முறையிலான பணி நியாமனங்களை ரத்து செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி இரண்டாம் கட்ட இயக்கமாக பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் 15.3.2017 அன்று தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

### தென் சென்னை

சேப்பாக்கம் நில அளவைத் துறை அலுவலகம் முன்பிருந்து புறப்பட்ட பேரணி வாலாஜா சாலை, வேளாண்மைத் துறை தலைமை அலுவலகம் வழியாக ஆவின் பாலகம் முன்பு நிறைவுற்றது. மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங் தலைமையேற்றார். வருவாய் நிர்வாகத் துறை அலுவலர் சங்கத் தலைவர் அ.அசோக் குமார் பேரணியை துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் மு.வெங்கடேசன் விளக்கவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் இரா.லட்சுமணன், பாலாஜி, இளங்கோ, பாலாஜி, ரேணுகாதேவி, எழிலன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். சுந்தர் நன்றி கூறினார். இதில் 100 பெண்கள் உட்பட 550 பேர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர்

டி.ஆர்.பி.சி.பள்ளி அருகில் துவங்கிய பேரணி துவங்கியது. மற்றும் பஜாரில் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. சங்கத்தின் மாவட்டத் தலைவர் கோ.இளங்கோவன் தலைமை தாங்கினார். அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தி.கலைச் செல்வி, மாவட்டச் செயலாளர் ஜெ.வி.அருள் டேனியேல், பொருளாளர் எஸ்.காந்திமதிநாதன், இணை நிர்வாகிகள் ஜி.மெல்கிராஜாசிங், எம்.பாண்டியராஜன், க.திவ்யா, எம்.சத்தியநாதன் உட்பட பலர் கண்டனவுரையாற்றினர்.

### வடசென்னை

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் பேரணி நடைபெற்றது. மாவட்டத்

தலைவர் ம.அந்தோணிசாமி தலைமை தாங்கினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் எஸ்.ஏ.வெற்றிராஜன் பேரணியை கொடி அசைத்து துவக்கி வைத்தார். பேரணி நிறைவில் நடைபெற்ற கோரிக்கை விளக்ககூட்டத்தில் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். கே.சி.ராம்குமார் (வருவாய்த் துறை), ம.தேவபிரசாத் (உள்ளாட்சி நிதி தணிக்கை பணி மன்றம்), இரா.லட்சுமணன் (மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கம்), பி.சீனிவாசலு (செங்கொடி சங்கம்), தேவிகா (சத்துணவு ஊழியர் சங்கம்), சி.ராமலிங்கம் (தொழிற் பயிற்சி அலுவலர் சங்கம்), சரஸ்வதி (மாநகராட்சி செவிலியர் சங்கம்), பி.புருஷோத்தமன் (எழும்பூர்) ஆகியோர் பங்கேற்று பேசினர்.

### நாகை

கோட்டாட்சியர் அலுவலகம் முன்பிருந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில் மாபெரும் பேரணி நடைபெற்றது. நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் வரவேற்புரை யாற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். வருவாய்த்துரை கிராம உதவியாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் எஸ்.தமிழ்ச்செல்வன் பேரணியை துவக்கி வைத்தார். எஸ்.தியாகராஜன் (ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம்), பி.விஜயன், எல்.பிரேம்சந்தர் (வருவாய்த்துறை அலுவலர் சங்கம்), என்.புகழேந்தி (சத்துணவு ஊழியர் சங்கம்) எஸ்.கணேசன் (சாலைப் பணியாளர் சங்கம்), என்.பாபுராஜ் (நகராட்சி ஊழியர் சங்கம்), சொ.கிருஷ்ணமூர்த்தி (ஓய்வூதியர் சங்கம்), வி.பாலசுப்பிரமணியன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம்), சீனி.மணி (இந்திய தொழிற்சங்க மையம்) உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரை யாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார். இதில் 170 பெண்கள் உட்பட 600க்கும் மேற்பட்டோர் பேரணியில் பங்கேற்றனர்.

### ஈரோடு

மாவட்ட துணைத் தலைவர் என்.சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். வட்ட கிளை செயலாளர் சுகுமார் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் கே.வெங்கிடு கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் கே.குமரேசன் பேரணியை துவக்கி வைத்து சிறப்புரை யாற்றினார். துறைவாரி தோழமை சங்க நிர்வாகி கள் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் கே.ராஜ்குமார் நிறைவுரையாற்றினார். இதில் 1300 பெண்கள் உட்பட 2050 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல்

நீதிமன்றம் பின்புறமிருந்து புறப்பட்ட இந்த பேரணிக்கு மாவட்ட துணைத் தலைவர் தங்கவேல் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் முபாரக்அலி, வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் மங்களபாண்டியன் பேரணியை துவக்கி வைத்தார். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் வீரகடம்பகோபு நிறைவுரையாற்றினார். ராஜேந்திரன் நன்றி கூறினார்.

### கோவை

கோவை மாவட்டத்தில் பேரணி நடைபெற்றது 110மகளிர் உட்பட 450 பேர் கலந்து கொண்டனர். சத்துணவு ஊழியர் சங்க மாநில தலைவர் தோழர் கே.பழனிச்சாமி பேரணியை துவங்கி வைத்தார். அனைத்துத் துறை ஓய்வூதியர்கள் சங்கத் தலைவர் சந்திரன் நிறைவுரையாற்றினார்.

### கிருட்டிணகிரி

மாவட்டத் தலைவர் பி.சந்திரன் தலைமை வகிக்க, பிஎஸ்என்எல் ஊழியர் சங்க மாநில செயலாளர் ஏ.பாபு பேரணியை துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் சி.பி.ஜெயராமன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். எஸ்.வி. ராஜா, மாவட்டத் தலைவர் (ஊரக வளர்ச்சித் துறை), வி.தேவராஜ், மாவட்ட செயலாளர் (சத்துணவு), வி.கருப்பசாமி, மாவட்ட துணைத் தலைவர் (பொது சுகாதாரத் துறை), எம்.கிருஷ்ணன், மாவட்டத் தலைவர் (TNHEA), கே.ஜெயலட்சுமி (சுகாதார செவிலியர்), எஸ்.சக்திவேல், வட்டத் தலைவர் (பட்டு வளர்ச்சித் துறை), எம்.பெர்னாட், மாவட்டச் செயலாளர் (அங்கன்வாடி), எம்.திம்மராஜ், மாவட்டச் செயலாளர் (நெடுஞ்சாலைத் துறை), எம்.சிவா, தலைவர், (HMCSEA) ஆகியோர்

வாழ்த்தி பேசினர். பி.கோவிந்தசாமி, மாநில பொதுச் செயலாளர், (த.நா.பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கம்) சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் ஆர்.நடராஜன் நன்றி கூறினார். பேரணியில் 128 பெண்கள் உட்பட 635 பேர் பங்கேற்றனர்.

### மதுரை

தமுக்கம் மைதானம் தமிழன்னை சிலை அருகில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை மாவட்டத் தலைவர் மு.முருகன் தலைமையில் பேரணி நடைபெற்றது. பேரணியை துவக்கி வைத்து மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் பேசினார். மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் கோரிக்கைகளை விளக்கி பேசினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் கனகராஜ், அ.சோலையன், அ.பாலாஜி, சீனிவாசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். எஸ்.எம்.வேல்மணி நன்றி கூறினார். இதில் 175 பெண்கள் உட்பட 620 பேர் பங்கேற்றனர்.

### தருமபுரி

வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு துவங்கிய அரசு ஊழியர்கள் பேரணியை மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி துவக்கி வைத்தார். பின்னர் நடைபெற்ற விளக்கக் கூட்டத்தில் மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், நிர்வாகிகள் காவேரி, முனிராஜ், யோகராசு, ராஜேஸ்வரி, கனகராஜ், மணிவண்ணன், நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

### கரூர்

மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் பேரணி நடைபெற்றது. பேரணியை சிஐடியு மாவட்டச் செயலாளர் முருகேசன் துவக்கி வைத்தார். கரூர் லைட் அவுஸ் கார்னரில் துவங்கி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு முடிவடைந்தது. பின்னர் நடைபெற்ற விளக்கக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களும், அங்கன்வாடி ஊழியர்களும் மற்றும் அனைத்துத் துறை ஊழியர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

ராஜசேகர், செந்தில், அன்பழகன் (வருவாய்), வெங்கடாசலம், எல்.கே.சுப்பிரமணியன், சரவணன் (ஊரக வளர்ச்சி), திருநாவுக்கரசு (வணிகவரி), விஜயகுமார், பழனிச்சாமி, பாலசுப்ரமணியன், குப்புசாமி, முத்துசாமி, செல்வம், முருகேசன், செவந்திலிங்கம் (நெடுஞ்சாலை), தாமோதரன் (கால்நடை), லட்சுமணன், மேனகா (கல்வி), இளங்கோ, பிரேம்குமார், சரவணன், செல்வம், அண்ணாதுரை, ஆர்.குஞ்சிதம் (பொது சுகாதாரம்), நாராயணன் (பட்டு வளர்ச்சி), பிரகாஷ் (கூட்டுறவு), சங்கர், அண்ணாதுரை, சுப்பையா (வேளாண்மை), ரத்மனமாலா, சாந்தி, பத்மாவதி (அங்கன்வாடி), சாமுவேல், மோகன்குமார், மோகன் (ஓய்வூதியர்) ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர். மாவட்ட துணைத் தலைவர் என்.சந்திரன் நன்றி கூறினார். இதில் 245 பெண்கள் உட்பட 480 பேர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி

மாவட்டத் தலைவர் ஆனந்தன் தலைமையில் ஸ்டேட் பாங்க் ரௌண்டானா பகுதியிலிருந்து பேரணி துவங்கியது. ஊரக வளர்ச்சித் துறையின் மாவட்டத் தலைவர் ராமன் வாழ்த்தி பேசினார். இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் நாகேஸ்வரன் பேரணியை துவக்கி வைத்தார். ஏ.டி.சி. திடல் முடிவுற்ற பேரணியை ஓய்வூதியர் சங்க நிர்வாகி ஆர்.குமார் வாழ்த்தி பேசினார். நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.கருணாகரன் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பரமேஸ்வரி நன்றி கூறினார். இல் 60 பெண் ஊழியர்கள் உட்பட 350 ஊழியர்கள் பங்கேற்றனர். ❖




இளநீரின் வாழ்வுதனை
பெப்ஸி கவ்வும்
இறுதியில்
இளநீரே வெல்லும்!

# மத்திய அரசின் ஐம்பொறிகளிலும் தீப்பொறி ஏற்றிய நாடாளுமன்றப் பேரணி!

**நா**ட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தேச விரோதமான மற்றும் தேசமக்களுக்கு எதிரான புதிய பொருளாதாரக் கொள்கைகள், தொழிலாளர்கள் மற்றும் சாமானிய மக்களின் நலன்களை பெரிதும் பாதிப்புற வைத்துள்ளன. நடந்து கொண்டிருக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை வழியிலான ஆட்சி நாட்டின் மொத்த பொருளாதாரத்தையும் சரிவிலும் சங்கடத்திலும் சிக்க வைத்துள்ளது. இதனால் விவசாயம், தொழில், உற்பத்தி போன்ற அனைத்து துறைகளிலும் சரிவு அல்லது தேக்கநிலை ஏற்பட்டு சேவைத் துறையின் வேகத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கம் எல்லாத் துறைகளிலும் உள்ள அரசு ஊழியத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு நாட்டின் முழு அமைப்பையும் தனியார்மயப்படுத்துவது என்பதாகும். அரசு ஊழியத்தின் வலிமையும் செயல்பாடுகளும் மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்ப மாற்றம் காண வேண்டும். ஆனால் அரசோ அதற்கு எதிர்மறையாக தொடர்ந்து அரசு ஊழியத்தை குறைக்கவே முயற்சித்து வருகிறது. அரசுப் பணிகளில் வெளியிலிருந்து ஆட்களை நியமிக்கும் அவுட்சோர்சிங் முறை, ஒப்பந்த அடிப்படையிலான வேலை முறை மற்றும் தனியார்வசம் வேலைகளை ஒப்படைத்தல் போன்ற நடைமுறைகள் அதிகரித்து வருகின்றன. "குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆட்சி" என்ற நடுவண் அரசின் சுலோகம், பொதுத்துறை நிறுவனங்களை, பொதுச்சொத்தை, இயற்கை வளங்களை மற்றும் பொது பயன்பாட்டு சேவைகளை மட்டும் தனியார்மயப்படுத்துவது அல்ல. அது மொத்த அரசாங்கத்தையுமே தனியார்மயப்படுத்தும் திட்டமாகும்.

இந்தியா முழுவதிலும் உள்ள மாநிலங்களில் தேசிய ஓய்வூதியத் திட்டம் அல்லது பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் 1.1.2004ம் தேதியிலிருந்து மற்றும் அதற்குப் பின்னர் அரசுப் பணிகளில் சேர்ந்த ஊழியர்களுக்கு செயல்படுத்தப்பட்டது. (ஆனால் தமிழகத்தில் இது 1.4.2003ம் தேதியே அமல்படுத்தப்பட்டு விட்டது). ஊழியர்களின் சேமிப்பும், கருவூல நிதியும் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஓய்வூதிய நிதி மேலாளர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் குறித்த சந்தேகங்கள் கடந்த 10 ஆண்டுகளின் கடுமையான அனுபவத்திற்கு பிறகே நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மாநில அரசுகள் இந்த நிதியை, நிதி போதாமை என்கிற பெயரால் தங்கள் பங்கை செலுத்த மறுத்து வருகின்றன. அரசாங்கத்தின் பங்கு செலுத்தப்படாவிட்டால் இந்த ஓய்வூதியத் தொகை என்பது சொற்ப அளவே இருக்கும். மத்திய அரசு இந்த அச்சமூட்டும் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெற துரித நடவடிக்கை எடுத்து எல்லா அரசு ஊழியர்களுக்கும் பழைய ஓய்வூதியத்தை உறுதி செய்ய வேண்டும் என்பது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் வலியுறுத்தலாகும்

தினக்கூலி மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை திணிக்கப்பட்டு நிரந்தர வேலைப் பணியிடங்களை கைவிடும் போக்கு போர் பாதுகாப்பு துறையிலும் கூட புகுத்தப்பட்டு வருகிறது. வீரஞ்செறிந்த போராட்டங்களை நடத்தி மாநில அரசு ஊழியர்கள் ஈட்டிய உரிமைகள் எல்லாம் நிலைநிறுத்தப்பட்ட ஊதியத்தை வழங்காததன் மூலம் மறுக்கப்பட்டு அதற்கு மாற்றாக, புறக்கணிக்கப்பட்ட ஊதியத்தில் மனித வளத்தை வாடகைக்கு அமர்த்தி செயல்படும் போக்கும் விதையூன்றப்பட்டுள்ளது.

மாநில அரசு ஊழியர்களின் ஊதிய திருத்தத்தில் இந்திய அளவில் சீரான நடைமுறை பின்பற்றப்படவில்லை. பெரும்பாலான மாநில அரசுகள் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், ஒரு சில மாநில அரசுகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் ஊதிய உயர்வு திட்டத்தை அமல்படுத்தி வருகின்றன. இருப்பினும் இன்னும் பல மாநில அரசுகள் மத்திய அரசு வகுத்துள்ள வகையில் ஊதிய திருத்தத்தை அமல்படுத்தவில்லை. இன்னும் சொல்லப் போனால் ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைகள் ஒருசில மாநிலங்களில் இன்னும்கூட அமல்படுத்தப்படவில்லை. மாநில அரசு ஊழியர்களின் ஊதியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற காலவரையில் திருத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளும் கிடப்பில் உள்ளன.

மத்திய அரசு இந்நாட்டின் மக்களிடமிருந்து பெரும்பாலான வரிகளை பெற்றுக்கொண்டு அதில் சிறிய அளவு மட்டும் மாநில அரசுகளுக்கு திருப்பி விடுகிறது. மத்திய-மாநில அரசின் உறவுகள் மறுவடிவமைக்கப்பட்டு, நடுவண் அரசானது, மாநில அரசுகள் தங்கள் ஊழியர்களுக் கான ஊதிய திருத்தத்தை மேற்கொள்வதற்கு, தேவையான நிதியை மாநில அரசுகளுக்கு ஒதுக்கீடு செய்ய வெண்டும்.

உலகமயமாக்கல் மூலம் உருவாகியுள்ள நுகர் வோர் கலாச்சாரம் கடுமையான சமூக பிரச்னை களை உருவாக்கியுள்ளது. மகளிருக்கெதிரான அட்டூழியங்கள் இந்தியா முழுவதிலும் அதிகரித் துள்ளது. மூலதன உணர்வு நிலையானது பணி செய்யும் இடங்களிலும் பெண்களை நுகர்வோர் தயாரிப்பு பொருளாக பார்க்கும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கை வளமான மனிதர்களை மேலும் வளமானவர்களாகவும் ஏழைகளை முற்றிலும் ஏழைகளாகவும் ஆக்கியுள் ளது. மத்திய அரசு பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரிச் சலுகையும் மற்றும் சேவை உதவியும் செய்யும் செயல்முறைகளை உயர்த்தியிருப்பதோடு சாமானிய மனிதன் பணத்தட்டுப்பாட்டில் உழல வேண்டிய பரிதாபகர நிலையையும் உருவாக்கி யுள்ளது. கார்ப்பரேட்டுகளுக்கு கம்பளம் விரிக்கும் இதே இந்திய அரசுதான் அரசு ஊழியர்கள் வருமான வரி கணக்கீட்டிற்காக வருமானவரி வரம்பை உயர்த்தக் கோரிய வேண்டுகோளை நிராகரித்திருக்கிறது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற் றம் நாளுக்கு நாள் விண்ணில் சீறிப்பாயும் ஏவுகணை போல் ஏறி வருவது சாதாரண மனித னின் வாழ்வை சொல்லொணாத் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆழ்த்தியுள்ளது. சர்வதேச சந்தை யில் கச்சா எண்ணையின் விலை வீழ்ச்சியடைந்த போதிலும் அரசாங்கம் பெட்ரொல் மற்றும் டீசல் விலையை பல முறை உயர்த்தியுள்ளது. மத்திய அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை தடுக்கவோ கட்டுக்குள் வைக்கவோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மாறாக. உலகளாவிய பொது விநியோக முறையை கவிழ்த்து கைகழுவும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

இந்திய உச்சநீதிமன்றத்தின் "சம வேலைக்கு சம ஊதியம்" என்ற தீர்ப்பானது. தங்கள் அடிப்படை உரிமைக்காக ஊழியர்கள் நடத்தும் போராட்டத்தின் முக்கிய முன்னேற்றமாகும். இது ஒப்பந்த தொழிலாளர்கள் கோரும், நிரந்தர தொழிலாளர்களுக்கு இணையாக செய்யும் வேலைக்கு இணையான ஊதியத்தை சட்டப் பூர்வமாக பெறுவதை வலியுறுத்துவதாகும்.

புதிய பொருளாதாரக் கொள்கையால் சாமன்ய மனிதனின் வாழ்க்கை மிகமிகக் கடினமானதாக ஆக்கியிருப்பதோடு. படுமோசமான இந்த கொள்கையை எதிர்த்து தாக்குபிடிப்பதானது இந்நாட்டில் பெரும் சவாலாக மாறியுள்ளது. மைய அரசு மத ரீதியிலான மனஉணர்வுகளை உபயோகித்து அந்த எண்ணங்களை இந்த போராட்டங்களுக்கு எதிராக பயன்படுத்துகிறது. அவர்கள் இந்நாட்டை பிளவுபடுத்துவதற்காக எல்லா வகையான உத்திகளையும் கையில் எடுக்கின்றனர். இதனால் மத நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. இனவாத விஷத்தைத் தூவி மதவாத அடிப்படையில் மக்களை பிளவு படுத்தும் வேலையை ஒருபுறம் செய்துகொண்டே மறுபுறம் அவர்களுடைய கவனத்தை அவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்கள் சார்ந்த அடிப்படை பிரச்னைகளிலிருந்து திசை திருப்பும் வேலையையும் நடுவண் அரசு செய்து வருகிறது.

மத்திய அரசு எல்லா தொழிலாளர் சட்டங் களையும் திருத்தி, வேலை அளிக்கும் முதலாளி களுக்கு "அமர்த்து-துரத்து" என்ற தங்குதடையற்ற அதிகாரத்தை வழங்கி ஊழியர்களின் உரிமை களையும் நலன்களையும் முற்றாக ஒழித்துக் கட்டுவதில் அதீத கவனம் செலுத்தி வருகிறது. தொழிலாளர் சட்டங்கள் தொழிலாளர்கள் மனநிலைக்கு எதிரான வகையில் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆவணங்கள் சொல்லும் வழிகாட்டு நெறிமுறைகள் எதையும் மத்திய அரசு பின்பற்ற வில்லை. இதனால் தொழிலாளர்களின் அடிப்படை தொழிற்சங்க உரிமைகள் அனைத்தும் தாக்குதலுக்குள்ளாகி இருக்கின்றன.

இத்தகைய ஆபத்தான நிலைமையிலிருந்து விடுபட உழைக்கும் வெகுஜன வர்க்கத்தின் அனைத்து பிரிவினரும் ஒன்றாக கரம் கோர்த்து மக்கள் விரோத, புதிய பொருளாதாரக் கொள்கை களை எதிர்க்க வேண்டும். இந்நாட்டில் உள்ள மாநில ஊழியர்கள் அனைவரும் இந்த நாசகரக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களை தொடர்ந்து நடத்த வேண்டும். ஆனால் மத்திய அரசோ இத்தகைய உண்மையான, நியாயமான கோரிக்கைகள் மீது எந்தவித கவனமும் செலுத்தாமல் உள்ளது. இத்தகைய சூழ்நிலையில்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் கீழ்க்கண்ட பத்து கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்களை தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளது.

1. தேசிய ஓய்வூதிய திட்டத்தை நீக்கிவிட்டு. வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத்தை எல்லோருக்கும் நீட்டிக்க வேண்டும்.

2. எல்லா ஒப்பந்த-தினப்படி ஊழியர்களை முறைப்படுத்த வேண்டும்.

3. சம வேலைக்கு சம ஊதியத்தை ஒப்பந்த மற்றும் தற்செயல் ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் உறுதிபடுத்த வேண்டும்.

4. சட்டப்படியான பணிஅமர்வு விதிகளுக் கேற்ப ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பணியிடங்கள் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

5. அரசுத் துறைகளை தனியார்மயமாக்கும் போக்கை கைவிட வேண்டும் மற்றும் அரசுப் பணிக்கு வெளிநபர்கள் அமர்த்தப்படுவதை நிறுத்த வேண்டும்.

6. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

7. பணியிடத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு கடுமையான நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

8. ஜாதி மத நல்லிணக்கத்தை பேணிக் காக்க வேண்டும்.

9. பொது விநியொக முறையை வலுப்படுத்தி விலைவாசியை கட்டுக்குள் வைக்க வேண்டும்.

10. சர்வதேச தொழிலாளர் நிறுவனத் தீர்மானங்களை செல்லத்தக்கதாக்க வேண்டும்.

இதன் ஒரு பகுதியாக பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் கையெழுத்து இயக்கங்கள் நடத்தி அவற்றினை பாரதப் பிரதமருக்கு அனுப்பி வைத்தது. இதன் தொடர்ச்சியாக (02.03.2017) அன்று இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் அரசு ஊழியர்கள் பாராளுமன்றத்தை நோக்கி பேரணியாக அணிவகுத்தனர். தமிழகத்திலிருந்து மட்டும் 250 அரசு ஊழியர்கள், இந்தியாவின் அனைத்து மாநில அரசு ஊழியர்களும் ஒருமனதாக ஒன்றிணைந்து நடத்திய இந்தப் போராட்டம் மத்திய அரசின் ஐம்பொறிகளிலும் தீப்பொறி ஏற்றியது என்பதில் ஐயமில்லை.

- மு.அ

# வாசகர் கடிதம்

“களம் காண்போம் வெற்றிக்கனி பறிப்போம்” படித்தேன். திருவண்ணாமலை மாநில மாநாட்டில் வைத்த கோரிக்கை முதல் வெற்றி என செய்தி அறிந்தேன். “கடவுள் இருக்கான் குமாரு” கட்டுரையில் இருவரும் சேர்ந்த உரையாடல் மூலம் அவர்களது மனநிலையை உணர்ந்து கொள்ள முடிந்தது. “பொதுச் செயலாளர் மேசையிலிருந்து” அப்பப்பா படிக்க படிக்க ஒரே ஜில்லென்றானது. மற்றபடி அனைத்து கட்டுரைகளும், கவிதைகளும் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

மார்ச் 2017 இதழில் படங்கள் மற்றும் அனைத்து கட்டுரைகளும் அருமை. ‘பகத்சிங் நினைவலைகள்’ அருமை. சாதி, மதம், இனம், மொழி என எல்லை கடந்து தெளிந்த சிந்தனையோடு திகழ்ந்த பகத்சிங் போன்ற தலைவர்கள் இன்றைய தேவை. வாசகர்கள் படித்து கடிதம் எழுதுவது மகிழ்ச்சி. போட்டி தேர்வுக்கான இலவச பயிற்சி மையம், எட்டாக்கனியாக இருக்கும் அரசு பணி கிட்ட ஏழை எளிய மாணவ மற்றும் இளைஞர்களுக்கு வழிகாட்டும்.

- **சி.பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்

சென்ற இதழில் உலகளாவிய ஓய்வூதியர் பிரச்சினைகள் பற்றிய கட்டுரை அருமை. மனங்கவர்ந்த மக்களின் நீதிபதி நிதர்சனங்களை எடுத்துக் கூறியது. பொதுத்துறை வங்கிகள் தனியார்மயமாகும் அபாயம் குறித்த வங்கிகள் வேலை நிறுத்த கட்டுரை பல உண்மைகளை எடுத்துக் கூறியது. நெல்லை ஆறுமுகத்தின் அரசியலமைப்பு சட்டம் ஒரு பார்வை தொடரட்டும்.

- **பாலாஜி**, கோவிலாம்பூண்டி

# திருமண வாழ்த்து

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட இணைச் செயலாளரும், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் மாவட்டத் தலைவருமான தோழர் கே.ராஜு மற்றும் ஜனநாயக மாதர் சங்க நாகை நகரக்குழு உறுப்பினர் இரா.முத்துச் செல்வி ஆகியோரின் மகள் இரா.அருள்ஜோதி & வே.திலீபன் திருமணம் நாகை லலிதா மஹாலில் 09.03.17 அன்று நடைபெற்றது. தமிம்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மற்றும் வட்ட நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர். ❖

# கொட்டட்டும் முரசு! கூப்பிடட்டும் அரசு!

அரசுடன் பேசும் மொழி
சிரசான தமிழ்தான்
ஆனாலும் புரியா மொழியாய்
அமைதியில் ஆளும் வர்க்கம்
அமைதியிலா உழைக்கும் வர்க்கம்

புரியும் மொழி
தெரிந்தது
வேலை நிறுத்த நாள் குறித்து
அறிந்தது
நாளை தள்ளிப் போடாது
நிறைவேற்றுவது
அரசின் அவசர அவசியப் பணி
ஆனது

ஒரு தலைமுறை
சுரண்டியது போதும்
மறு தலைமுறையும்
திரண்டது காணும்
வரையறுக்கப்பட்ட ஊதியம்
வரைமுறையற்ற சுரண்டலுக்கு
முடிவுரை எழுதட்டும்

ஊதியம் சுமை
ஓய்வூதியம் கூடுதல் சுமை
தேய்ந்து போன இசைத் தட்டாய்
நொந்து போகச் செய்யும்
உலக வங்கியின் குரல்
புதிய ஓய்வூதிய நிகழ்ச்சி நிரல்
எந்திரமான அரசுகளின்
தந்திர வலையில்
சிக்குண்ட ஊழியர்கள்
சிக்கலை அவிழ்க்கும் நாள்
ஏப்ரல் இருபத்தைந்து அரசின் முன்
வேலை நிறுத்தப் பந்து

முரண்பாடுகளின் மூட்டை
அவிழ்க்கப்படாமலேயே
உதயமாகும் ஊதியக் குழு
பதிவாகும் கடந்த ஏழு
குழுக்களின் அனுபவம்
தொடர்கதை இடர்களே

அரசும் அமைப்பும்
அதிகார வர்க்கமும்
முத்தரப்பாய் பேசாமல்
முகிழ்க்கும் முடிவுகள்
அரைவேக்காட்டு உணவே
கரையேறா கனவே

பின்னோக்கிய பயணம்
நன்னம்பிக்கை தருணம்
ஐக்கிய முன்னணி அரசு
முக்கிய முத்தரப்புப் பேச்சு
ஊதிய மாற்ற முடிவு
ஒரே நாளின் விளைவு
நாற்பது விழுக்காடு உயர்வு
ஏற்பதானது மாநில அரசு
ஏற்பதாகும் இப்போதும் சிரசு
ஏற்படுத்துக பேச்சை முத்தரப்பு
ஏற்படைத்தாகும் வீச்சாய்!

கடந்த ஆண்டின் போர்
சிறந்த பத்து நாள் போர்
மறந்தா போனது நேர்
பிறந்த ஆண்டிலும் தொடரும்
வேலை நிறுத்தமாய் வளரும்

வரும் ஏப்ரல் இருபத்தைந்து
தரும் நெருக்கடி முன்பே உணர்ந்து
அரசின் பேச்சுவார்த்தை என்று
முரசு கொட்டும் போரால் நன்று
வென்று காட்டும் ஊழியர் சங்கம்
என்றும் ஊழியர் நலனே பொங்கும்.

**- பெரணமல்லூர் சேகரன்**

*நாள் : 15.4.2017* *இடம் : திருச்சி*

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில அளவிலான*

## வேலை நிறுத்த ஆயத்த மாநாடு

ஆர்ப்பரிப்போம்! அணிவகுப்போம்! அலைகடலென!
திருச்சி நோக்கி...!

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைமையில் இயங்கும் 60க்கும் மேற்பட்ட துறைவாரி சங்கங்களின் நிலுவை கோரிக்கைகளும், அவற்றை நிறைவேற்ற வலியுறுத்தி நடைபெறவுள்ள காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்திற்கான அறிவிப்பும்

### ஊதிய மாற்ற அலுவலர் குழுக்கான அரசாணையில் சங்கங்களின் கோரிக்கைகள் கேட்பதற்கான வாய்ப்புகள் மறுப்பு

ஒளிவு மறைவற்ற, திறமைமிக்க, பொறுப்புள்ள நிர்வாகத்தை அளிப்பது நல்ல அரசின் இலக்கணமாகும். பலவிதமான விமர்சனங்களுக்கு இடையே பதவி ஏற்றுள்ள தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது பாராட்டுதல்களை அவர் பதவி ஏற்ற உடனே தெரிவித்தது. மேலும் அவர் முன் உள்ள முக்கிய பிரச்னை களில் முதன்மையானது, உடனடியாக கவனிக்கப்பட வேண்டியது அரசு ஊழியர்கள் பிரச்சனை என்றும், அதன்பேரில் உடனடி கவனம் செலுத்த வேண்டும் என்றும் எமது சங்க 20.2.2017 தேதியிட்ட அறிக்கையில் தெரிவித்து அந்த பிரச்னைகளையெல்லாம் பட்டியலிட்டிருந்தோம். நாங்கள் வைத்திருந்த கோரிக்கைகளை கருத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 22.02.2017 அன்று ஐந்து நபர் கொண்ட ஒரு அலுவலர் குழுவை அமைத்துள்ள அறிவிப்பினை வெளியிட்டார். இதற்கான அறிவிப்பை வெளியிட்ட போது அதில் சங்கங்கள் இவ்வலுவலர் குழுவிற்கு ஊதிய விகிதம் ஓய்வூதிய திருத்தம் குறித்த தங்கள் கோரிக்கைகளை அனுப்பி வைக்கலாம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது, ஆனால், அதே தேதியில் வெளியிடப்பட்ட இது குறித்த அரசாணையில் சங்கங்கள் தங்கள் கோரிக்கையை அனுப்பி வைக்கலாம் என்ற தகவல் வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தது.

### ஊதிய மாற்றத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லாத நிதிநிலை அறிக்கையால் பெரும் ஏமாற்றம்

அலுவலர் குழு, ஊதிய மாற்றம் குறித்த தனது பரிந்துரைகளை இறுதிப்படுத்துவதற்கு முன்னர் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களை அழைத்து, விரிவான கலந்துரையாடல் நடத்தி, கருத்தொற்றுமையின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதும் அதை அரசாங்கம் கருத்தில் கொள்ளாமல் முரண்பாடுகளுடனான அரசாணைகளை வெளியிட்டு வருவதும் அரசு ஊழியர்களை மன உளைச்சலுக்கு ஆட்படுத்தும் செயல்களாகும். கடந்த காலங்களில் இத்தகைய ஜனநாயக நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதை யும் குறிப்பாக சென்ற ஊதிய மாற்றத்தின்போது அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களை அழைத்துப் பேசாமலும், நாங்கள் கொடுத்த கோரிக்கைகளை பரிசீலிக்கா மலும் ஊதிய மாற்றங்கள் செய்யப்பட்டதால் பல்வேறு குறைபாடுகளுடனும் சமச்சீரற்ற ஊதிய உயர்வுகளுடனும் அரசாணைகள் வெளிவந்து ஊழியர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியதோடு, சமச்சீரற்று வழங்கியதாக அரசே ஏற்றுக்கொண்டு அரசாணையிலேயே குறிப்பிட்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது ஊதிய மாற்ற அலுவலர் குழுவின் செயல்பாடுகளில் இருந்த அக்கரையற்ற போக்கையும், நியாயமற்ற தன்மையையும், ஏதேச்சிகார நிலையையும் அவை எடுத்துக்காட்டின. இதனால் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது போராட்டங்கள் திணிக்கப்பட்டன. அதேபோன்றதொரு உத்திதான் தற்போதும் அரசுத்தரப்பில் கடைபிடிக்கப்படுகிறது என்பதற் கான முகாந்திரங்கள் அதிகமாகவே தெரிகிறது. ஏனெனில் 16.3.2017ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் நிதி யமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கை யில் ஊதிய மாற்றத்தினால் ஏற்படக்கூடிய கூடுதல் ஊதியப் பலன்களுக்காக நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்பதுடன் "ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய செலவினம் வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்படவில்லை" என தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசு ஊழியர்கள் இந்த வருடம் ஊதிய மாற்றப் பலன்களை பெற முடியாது என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசு ஊழியர்கள் 1.1.2016 ஆம் தேதி முதல் ஊதிய மாற்றப் பலன்களை பெற்றுவிட்ட நிலையில், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அது மறுக்கப்பட்டுள்ளது கொஞ்சமும் ஈவிரக்கமற்ற, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடவடிக்கையாகும்.

ஒரு மக்கள் நலன் சார்ந்த அரசு தன் மக்களுக்கு அறிவிக்கும் நலத்திட்டங்கள் அது எதிர்பார்க்கும் வகையில் முழுமையாக சென்றடைய வேண்டுமென்றால் அந்த அரசாங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் அந்த திட்டங்களை அர்ப்பணிப்பு உணர்வுடன் மக்களுக்கு கொண்டு சென்று சேர்க்கும் மனநிலையில் இருக்க வேண்டும். அதற்கு அரசு அதன் கீழ் பணியாற்றும் அரசு ஊழியர்கள் கேட்கும் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படை தன்மையுடன் அணுகி அவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகளில் உள்ள நியாயதர்மங்களை சீர்தூக்கிப் பார்த்து எல்லோருக்கும்

சமச்சீரான வகையில் ஊதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு அரசாணைகள் வெளியிடுவதன் மூலம் அரசு ஊழியர்கள் தங்கள் பணிகளை அதாவது, மக்கள் நலத்திட்டங்களை அதன் கடைசி பயனாளி வரை கொண்டு சென்று சேர்க்கும் பணிகளை மன நிறைவுடன் மேற்கொள்ள ஏதுவாக அமையும். அதுபோல் நடவாத போது அவர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடுவதிலேயே காலவிரயங்கள் ஏற்பட்டு, மக்களுக்கு சென்றடைய வேண்டிய திட்டங்களில் சுணக்கம் ஏற்பட்டுவிடக் கூடிய சூழ்நிலைகள் தோன்றிவிடும் என்பதை இவ்வரசு கவனத்தில் கொண்டதாக தெரியவில்லை.

சென்ற ஊதிய மாற்றத்தின்போது நிகழ்ந்த தாமதங்களையும் முரண்களையும் மாண்புமிகு முதல்வரும், நிதியமைச்சரும் ஒப்புக்கொண்டு இனி அமைக்கப்படும் ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவின் பரிந்துரைகள் காலதாமதப் படுத்தாமல் வழங்கப்படவும், அரசாணைகள் முரண்பாடுகள் இல்லாமல் வெளியிடப்படவும் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்கவேண்டிய சூழ்நிலை எழாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பேரவையில் பட்ஜெட் வரவு செலவு திட்ட உரையிலும் (13-02-2016), தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழான அறிக்கையிலும் (19-02-2016) தெரிவித்திருந்தனர். அந்த அறிவிப்புகள் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையின் மூலம் பொய்யாக்கப்பட்டுள்ளன.

## புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரை ஓராண்டு காலமாகியும் வரவில்லை

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது "அதிமுக அரசு அமைத்தால் புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படும்" என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார். அந்த ஆண்டில் அதிமுக அரசமைத்தும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் போராட்டம் நடத்தினோம், இறுதியில் ஆட்சியின் ஐந்தாண்டுகள் முடியும் தறுவாயில் கடந்த 19.02.2016ஆம் தேதி ஜெயலலிதா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் விதி எண்,110ன் கீழ் அறிக்கை வெளியிட்டு அதில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை அளிக்க திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைத்து அது மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை அளிக்கும் படியும் வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். ஆனால் அந்த வல்லுநர் குழுவின் காலவரையானது இதுவரை நான்குமுறை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இது பழைய பென்சன் திட்டத்தை உண்மையில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுதானா அல்லது காலவிரயம் செய்து அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்யும் செயலா என்கிற சந்தேகமும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இது குறித்தும் நிதிநிலை அறிக்கையில் எந்தவித அறிவிப்போ உத்தரவாதமோ வழங்கப்படவில்லை என்பதுடன் வல்லுநர் குழு என்பதே ஒரு கண்துடைப்பு நாடகம்தானோ என்று அரசு ஊழியர்கள் கருதும் நிலை தோன்றியுள்ளது.

## 20 சதவீத இடைக்கால நிவாரணம் மறுப்பு

சென்ற முறை தமிழக அரசு ஊழியர்களுக்கு அமல் படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தில் ஓராண்டு நிலுவைத் தொகை மறுக்கப்பட்டது என்பதையும் அது 1.1.2006 முதல் கருத்தியல் ரீதியாகவும். 1.1.2007 முதல் பணப்பலனுடனும் அமல்படுத்தப்பட்டது என்பதையும் ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு பலமுறை அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் கொண்டு சென்று நிலுவைத் தொகையினை கேட்டபோது அப்போது அரசுத்தரப்பில், அடுத்த ஊதிய மாற்றத்தில் காலதாமதமோ, கருத்தியல் ரீதியான கணக்கீடுகளோ இல்லாமல் ஊதிய மாற்ற பரிந்துரைகள் உடனடியாக அமல் படுத்தப்படும் என்றும், பிந்தைய ஆண்டுகளில் தவணைத் தொகை வழங்க வேண்டிய அவசியம் இருக்காது என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஆனால் மேற்கூறப்பட்டதற்கு மாறாக தற்போதே 19 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் முழு நிலுவைத் தொகையையும் ஊழியர்களுக்கு ஒரே நேரத்தில் கொடுப்பதில் அரசுக்கு நிதிச்சுமை ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், மத்திய அரசு ஊழியர்கள், ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை வாங்கிவிட்ட நிலையில் தமிழக அரசு ஊழியர்கள் குறைவுபட்ட ஊதியத்துடன் குடும்பத்தை நடத்த சிரமப்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 01.01.2016 முதல் 20 சதவீத ஊதியத்தை வழங்கிட வேண்டும் எனவும் முதல்வர் அவர்கள் இந்த நியாயமான கோரிக்கையை உடனடியாக பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்திருந்ததோடு, இது குறித்த அறிவிப்பு சட்டசபையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது நிச்சயம் வெளியாகும் என்று நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் அரசு ஊழியர்களின் இந்த கோரிக்கையும் புறந்தள்ளப்பட்டுள்ளது என்பது நிதிநிலை அறிக்கையின் வாயிலாக தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

## சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவது பற்றி முடிவெடுப்பதில் அரசு பாராமுகம்

தமிழக அரசாங்கத்தில் பல்வேறு அரசுத்துறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதிய

விகிதம், தினக்கூலி ஆகியவற்றின் கீழ் லட்சக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். இந்த இளைஞர்களின் எதிர்காலத்தை வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் இருளடையச் செய்து வருகிறது. தமிழக அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலை ஒரு புறமிருக்க, படித்துவிட்டு வேலை வழங்கப்படாமல் இருக்கும் இளைஞர்களும் பெண்களும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இளைஞர்களையும், பெண்களையும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இத்தகைய கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், வருவாய் கிராம உதவி யாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், தோட்டக்கலை பண்ணை ஊழியர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் கணிணி இயக்குநர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு, முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர். அரசு இந்த போக்கை உடனடியாக கைவிட்டு இத்தகைய ஊதியங்களின் கீழ் பணியாற்றி வரும் அனைத்து ஊழியர்களுக்கும் முறையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும் என்றும் அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தி பல போராட்டங்களை முன்நின்று நடத்தினோம். எங்களுடைய போராட்டங்களின் வாயிலாக

எங்களது நியாயமான கோரிக்கைகளை உணர்ந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்புகாலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப் பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற முக்கியமானதொரு வாக்குறுதியை தெரிவித்தார்.

ஆனால் அதன்பிறகு தேர்தலில் வென்று தமிழக முதல்வராக நான்கரை ஆண்டுகளாகியும் சொன்னபடி தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்புகாலமுறை ஊதியம் போன்றவை ஒழிக்கப்படாததாலும், தரப்படுத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறையுடன் கூடிய நிரந்தரப்பணி மற்றும் வரையறுக்கப் பட்ட ஊதியம் போன்றவை வழங்கப்படாததாலும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மீண்டும் பல்வேறு விதமான போராட் டங்களை நடத்திட வேண்டிய நிலை எழுந்தது. அந்த இடைவிடாத போராட்டங்களின் விளைவாக, மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 19-02-2016 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் விதி 110-ன் கீழ் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல், தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களை, காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வருதல், சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் போன் றவை குறித்து பல்வேறு கோரிக்கைகள் அரசால் பெறப்பட் டுள்ளன. இக்கோரிக்கைகள், பல்வேறு அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்களை ஒப்பிட்டு, அவர்களின் ஈநைசயசஉால அதாவது அதிகார நிலை மற்றும் துறைகளின் யீயசவைல அதாவது ஒப்புநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்க வேண்டும். எனவே, இத்தகைய கோரிக்கைகளை ஊதியக்குழுவே பரிசீலிக்க இயலும் என்பதால், இந்த கோரிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஊதியக்குழு மூலம் பரிசீலிக்கப்படும், என்று தெரிவித்திருந்தார்.

தற்போது, முதல்வரின் மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிட் டுள்ளபடி தமிழகத்தில் எட்டாவது ஊதிய மாற்றத்துக்கான அலுவலர் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் எமது சங்கம் அளித்துள்ள, ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல், தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களை, காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வருதல், சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட் டுள்ள அலுவலர் குழு ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை அளிக்க முதல்வர் அலுவலர் குழுவிற்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்திருந்தோம். அது குறித்து இது வரையில் எவ்வித அறிவிப்புகளும் வெளியாகவில்லை. தமிழக அரசின் இத்தகைய வஞ்சிக்கும் போக்கானது அரசு ஊழியர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

## சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்திற்கான ஊதியம் குறித்த அறிவிப்பு வரும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்தது

தமிழகத்தின் கிராமப்புறங்களைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய சிறந்த கல்வி வசதி பெற இயலாத பகுதிகளிலிருந்து அரசுப் பணிக்கு வந்தவர்கள் சாலைப் பணியாளர்கள். இவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒட்டுமொத்தமாக பணிநீக்கம் செய்யப்பட்டனர். பணி நீக்கத்திற்குப் பிறகு பல்வேறு போராட் டங்களை நடத்தினர். இவர்கள் பணி நீக்கத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. ஒருபுறம் போராட்டம், மறுபுறம் நீதிமன்ற வழக்கு. இரண்டுக்கும் இடையில் வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாமல் கடன் வாங்கி வாழ்க்கை நடத்திட வேண்டிய அவல நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டது. இவர்களில் கணிசமானவர்களுக்கு கடன்தொல்லை மிகுதியாகி, வாழ்வது அவதியாகி, அதனால்

மனஉளைச்சலுக்கு ஆளாகி நூறுக்கும் மேற்பட்டவர்கள் வாழமுடியாமல் மரணமடைந்தனர். எஞ்சியிருந்தவர்கள் 41 மாத வாழ்க்கைப் போராட்டத்திற்குப் பின்னர் நீதிமன்ற உத்தரவின் மூலமாக மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டனர்.

சாலைப்பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட காலம் முதல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட காலம் வரையிலான இடைப்பட்ட 41 மாத காலத்தை பணிவரன்முறை செய்யவும் பணி வழங்கப்படாமல் இருந்த 41 மாத காலத்தை பணிக்காலமாக கருதி அவர்களுக்கு 41 மாத ஊதியம் வழங்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி கோரிக்கை மனுக்கள் கொடுத்து வருகிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள, தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த சாலைப்பணி யாளர்கள் வேறு வேலைக்கு செல்லமுடியாமல் 41 மாதகால மும் ஊதியமின்றி தங்கள் குடும்ப வாழ்வை, கடன்பெற்று வாழ நேர்ந்துள்ளதையும், கடன்தொல்லையில் உழன்று வரும் அவர்கள் பொருளாதார சிக்கலிலிருந்து மீண்டு சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ, உரிய உத்தரவுகள் பிறப்பிக்க, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் விடுத்த வேண்டு கோள்கள், கோரிக்கைகள் அனைத்தும் மறுதலிக்கப்பட் டுள்ளன. இது சம்பந்தமான அறிவிப்புகள் இந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் வரும் என்று சாலைப்பணியாளர்களும் அரசு ஊழியர்களும் எதிர்பார்த்த நிலையில் அது கண்டு கொள்ளாமல் விடப்பட்டுள்ளது அரசு ஊழியர்கள் மத்தியிலும், சாலைப்பணியாளர்கள் மத்தியிலும் வெறுப்பையும் வேதனை யையும் ஏற்படுத்தியுள்ளது.

### காலவரையற்ற போராட்டம் காலத்தின் கட்டாயமாகியுள்ளது

மேற்கண்ட சூழ்நிலைகள், அரசு ஊழியர்கள் தங்கள் போராட்டத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்தும் நிர்ப்பந்தத் திற்கு ஆளாக்கியுள்ளன. திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாநில மாநாட்டில் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்கங்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு

02.02.2017ஆம் தேதி பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்றன.

15.03.2017ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் திரண்டு பங்கேற்ற பேரணிகள் நடத்தப்பட்டன.

இதைத்தொடர்ந்து,

08-04-2017 அன்று மாவட்டத் தலைநகரங்களில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடத்துவது எனவும்,

15-04-2017 அன்று திருச்சி மாநகரில் லட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் மாநில அளவிலான வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டினை நடத்துவது எனவும்,

25-04-2017 ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எனவும்

தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதன் தலைமையில் இயங்கும் 60க்கும் மேற்பட்ட துறைவாரிச் சங்கங்களும் கலந்து கொள்ள உள்ளன.

### காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்ட அறிவிப்பு

அரசு ஊழியர்கள் பிரச்சனைகளில் அரசு மெத்தனம் காட்டாமல் அவர்களை அழைத்துப்பேசி உரிய தீர்வு காண வேண்டும். எத்தனை பெரிய இயக்கங்கள் நடத்தினாலும், எவ்வளவு நாள் போராடினாலும் அதைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை எனும் நிலை அரசுத்தரப்பில் தொடரு மானால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டம் மக்கள் போராட்டமாக உருமாறும் என்பதை அரசு உணர்ந்து பிரச்சனைகளை பேசித் தீர்க்க முன் வர வேண்டும். அன்றின்,

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை தொடரவும்

01.01.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்கிடவும்

சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து, வரையறுக் கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிடவும்


தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து, காலியாக உள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த் திடவும்

சாலைப் பணியாளர்களின் 41 மாத பணிக்காலத்தை, பணிக்காலமாக அறிவித்திடவும்

25.04.2017ஆம் தேதி முதல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதன் தலைமையின் கீழ் இயங்கும் 60க்கும் மேற்பட்ட துறைவாரிச் சங்கங்களும் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் என்று தமிழக அரசுக்கு இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது. ❖



விசுவாசத்திற்கு
நாய் வளர்க்கத்
தெரிந்த மனிதனுக்கு
சுவாசத்திற்கு
மரம் வளர்க்கத்
தெரியவில்லை



# தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட்டுள்ள அலுவலர் குழுவின் முன் வைக்கப்பட்ட

# கோரிக்கை சாசனத்தின் சுருக்கம்

மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகளின் பின்னணியில் மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம் மாற்றியமைக்கபபட்டுள்ளது. அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை மாற்றியமைத்திடும் பணியை மேற்கொள்ள தமிழக அரசால் அலுவலர் குழு அமைக்கப்பட்டிருப்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் வரவேற்கிறோம்.

அலுவல் குழு, ஊதிய மாற்றம் குறித்த தனது பரிந்துரைகளை இறுதிப்படுத்துவதற்கு முன்னர், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களைஅழைத்து, விரிவான பேச்சுவார்த்தை நடத்தி, கருத்தொற்றுமையின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். கடந்த காலங்களில் தமிழக அரசில் இத்தகைய ஜனநாயக நெறிமுறைகள் அவற்றின் அர்த்த அடர்த்தியுடன் பின்பற்றப் படவில்லை. எனவேதான், பெரும் எண்ணிக்கையிலான அரசு ஊழியர்களை உறுப்பினராகக் கொண்ட, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையான சங்கங்களை அழைத்துப் பேசி விரிவான விவாதங்களை நடத்தி, கருத்தொற்றுமையின் அடிப்படையில் இந்த அலுவல் குழுவின் பரிந்துரைகளும், அவற்றின் மீதான அரசின் முடிவுகளும் அமைய வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

**வாழ்க்கை ஊதியம் (Living Wage) மற்றும் நியாய ஊதியம் (Fair Wage)**

இந்த அலுவல்குழுவின் தற்போதைய ஊதிய மாற்றம் குறித்த குறிப்பான எங்களது கருத்துக்களை பதிவு செய்யும் முன்னர் பொதுவாக ஊதிய நிர்ணயம் குறித்த எங்களது சங்கத்தின் நிலைபாட்டை முன்வைக்க விழைகிறோம். இந்திய நாடு விடுதலை பெற்று 69 ஆண்டுகள் முடிவடைந்த பின்னரும், குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டு 67 ஆண்டுகள் முடிவடைந்த பின்னரும்கூட இந்நாட்டின் உழைப்பாளி மக்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்தும், நாட்டின் வருமானத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பது குறித்தும், அறிவியல் பூர்வமான அணுகுமுறையுடன் கூடிய ஒரு தேசிய ஊதியக் கொள்கை நாளதுவரை வகுக்கப்படவில்லை.

நாடு அன்னியரின் ஆளுமையின் கீழ் இருந்த 1919ல் உருவாக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் இந்தியாவும் ஒரு உறுப்பு நாடாக இருந்து வருகிறது. எனினும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் நிறைவேற்றிய கோட்பாடுகளான ‘கௌரவமான உழைப்பு’ (DECENT LABOUR) மற்றும் ‘கூட்டுப்பேர உரிமை’ (RIGHT TO COLLECTIVE BARGAINING) ஆகியவை, அவற்றின் அர்த்த அடர்த்தியுடன் இந்தியாவில் அமல்படுத்தப்படவில்லை. குறிப்பாக அரசு ஊழியர்கள் இந்த உரிமைகள் மறுக்கப்பட்ட பிரிவாகவே உள்ளனர். அவர்களது ஊதியம் சார்ந்த பிரச்சனைகளில் அவர்கள் தங்கள் உழைப்புசக்தியை வழங்குபவர்கள் என்ற முறையில் அவர்கள் தரப்பை கேட்காமலும், பரிசீலிக்காமலும், அரசு அவர்கள் உழைப்பு சக்தியை வாங்குபவர்கள் என்ற முறையில் அவர்களிடம் கலந்து பேசியோ, கருத்தொற்றுமையை ஏற்படுத்தியோ ஊதியங்களை நிர்ணயிக்கும் சூழல் இன்றுவரை ஏற்படவில்லை. மாறாக எஜமான் அடிமை மனப்பாங்கில் ஊதியங்களை தன்னிச்சையான நிர்ணயிக்கும் போக்கே தொடர்கிறது. சாதாரன சந்தையில் கூட விற்பவர்கள் நிர்ணயிக்கும் விலை வாங்குபவர்களால் பேரத்தின் மூலம் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கு வரும் நிலை இருக்கும்போது, உழைப்புச் சந்தையில் இந்த நடைமுறை நேர்மாறாக இருக்கிறது. விடுதலைக்குப்பின் தொடர்ச்சியாக திட்டமிட்டு வளர்க்கப்பட்ட வேலைவாய்ப்பின்மை காரணமாக உழைப்பவர்களுடைய ஊதியம், அரசு மற்றும் நிர்வாகத்தால் அடிமாட்டு விலையில் நிர்ணயிக்கப்படுவதும், வேறுவழியில்லாமல் அதை ஊழியர்கள் ஏற்றுக்கொள்வதுமான நடைமுறை, சுதந்திர இந்தியாவில் நாளது வரை தொடர்ந்துகொண்டிருக்கும் கௌரவ கொத்தடிமை முறையாகும்.

இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு-IV அரசுக் கொள்கையினை நெறிபடுத்தும் கோட்பாடுகளில், பிரிவு 43 “தொழிலாளர்களுக்கான வாழ்வூதியம், இன்னபிற”, தலைப்பின் கீழ் ஊதிய அமைப்பு குறித்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

‘இந்திய அரசானது, தகுந்தவாறு சட்டங்கள் இயற்றியோ அல்லது பொருளாதார அமைப்பு மூலமோ, அல்லது வேறு எந்த வழியிலோ எல்லோருக்கும் வேலை, வாழ்க்கை ஊதியம், ஓய்வில் முழு சுகத்தையும் நுகரக்கூடிய வேலைநிலைமை ஆகியவற்றையும் சமூக, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில், ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் உத்தரவாதப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொள்ளும்’

இவ்வாறு அரசியல் சாசனத்தில் கூறப்பட்ட வாழ்க்கை ஊதியம் என்பது இன்றுவரை ஒரு தொலைதூர கனவாகவே இருந்து வருகிறது.

மத்திய அரசால் 1948ல் நியமிக்கப்பட்ட நியாய ஊதியக்குழுவில் குறைந்தபட்ச ஊதியம் என்பது ஊதிய வகைகளுக்குள் அடிமட்டம் என்றும், வாழ்க்கை ஊதியம் என்பது உயர் மட்டம் என்றும், குறைந்தபட்ச ஊதியத்தின் உச்சநிலையும், வாழ்க்கை ஊதியத்தின் அடிமட்ட நிலையும் ‘நியாய ஊதியம்’ என்றும் வரையறுக்கப்பட்டது. ஆனால், இந்த வரையறையும் இதுநாள்வரை வசதியாக கவனத்தில் கொள்ளாமலே விடப்பட்டுள்ளது. எனவே, நியாய ஊதியத்திற்கும் குறைவாக வழங்கப்படும் எந்த ஊதியமும் அநியாய ஊதியமாகவே இருக்கும்.

**தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம்**

அரசியல் சாசனத்தில் கூறப்பட்ட வாழ்க்கை ஊதியமும் (Living Wage) நியாய ஊதியக்குழுவால் வரையறுக்கப்பட்ட நியாய ஊதியமும் (Fair Wage) வழங்கப்படாத நிலையில், 1957ல் கூடிய 15வது இந்திய தொழிலாளர்களின் முத்தரப்பு மாநாடு (அரசு, முதலாளிகள், தொழிலாளர்கள் பங்கேற்ற மாநாடு) இந்திய தொழிலாளர்களுக்கு தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும் என ஒரு மனதாக முடிவாற்றியது. இதனடிப்படையில் தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு டாக்டர் அக்ராய்டு என்ற உணவியல் நிபுணர் தலைமையிலான குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் அளவீடுகள் நிர்ணயிக்கப்பட்டன. அதன்படி ஒரு தொழிலாளியின் குறைந்தபட்ச ஊதியம் என்பது அந்தத் தொழிலாளியின் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் மற்றும் இதர தேவைகளை திருப்தியான அளவுக்கு பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். ஒரு தொழிலாளியின் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான ஐந்து விதிமுறைகளாக அந்த மாநாட்டில் கீழ்க்கண்டவைகள் வகுக்கப்பட்டன.

1. நிலையான தொழிலாள வர்க்கத்தின் குடும்பம் என்பது மூன்று நுகர்வு அலகுகளைக் கொண்டதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதில் சம்பாதிக்கும் ஒரு தொழிலாளியுடன் சேர்த்து பெரியவர்கள் இருவர், சிறுவர் இருவர் ஆவர்.

2. குறைந்தபட்ச உணவுத் தேவை என்பது ஒரு நாளைக்கு ஒரு நுகர்வு அலகுக்கு 2700 கலோரிகள் கொண்ட சீரான உணவாக இருக்க வேண்டும். அதாவது ஒரு தொழிலாளர் குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 8100 (2700 X 3) கலோரிகளாக இருக்க வேண்டும்.

3. ஆடை தேவையானது ஒரு தனிநபர் நுகர்வுக்கு ஆண்டொன்றுக்கு 18 கஜம் என்ற அடிப்படையில் ஒரு சராசரி தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டுக்கு 72 கஜங்கள் இருக்க வேண்டும்.

4. வீட்டு வசதிக்காக, அரசு தொழில்துறை வீடமைப்பு திட்டத்தில் குறைந்தபட்ச பகுதிக்கான வாடகையை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

5. எரிபொருள், மின்சாரம் மற்றும் இதர செலவினங்களுக்காக 20 சதவீதத் தொகையை, மொத்த குறைந்தபட்ச ஊதியத்தில் அமைக்க வேண்டும்.

இந்த அடிப்படை வரையறைகளை உச்சநீதிமன்றம், யூனிச்சோய் மற்றும் பலர் -எதிர்-கேரள அரசு [1962 AIR 12] என்ற வழக்கில் 1961ம் ஆண்டு உறுதி செய்தது. அதன்பிறகு ரெப்டகாஸ் பிரட் நிர்வாகம் -எதிர்- அதன் தொழிலாளர்கள் [1992 AIR 504] வழக்கில், உச்சநீதிமன்றம், ஒரு தொழிலாளியின் குறைந்தபட்ச ஊதியத்தில் ஆறாவது விதிமுறையாக

6. குழந்தைகளின் கல்வி, மருத்துவ சிகிச்சை, மனமகிழ்வுகள், பண்டிகை மற்றும் விழாக்கள் ஆகியவற்றுக்காக 25 சதவீதம் நடைமுறையில் இருக்கும் குறைந்தபட்ச ஊதியத்தில் சேர்க்க வேண்டும்

என்று உத்தரவிட்டது. இந்த குறைந்தபட்ச ஊதிய அமைப்பு மேற்கண்ட ஆறு அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும், இது ஒரு தொழிலாளியின் பிழைப்பாதார நிலையில் குறைந்தபட்ச ஊதியமன்றி வேறில்லை என்றும், எல்லா தொழிலாளிகளும் எந்த சூழ்நிலையிலும் இந்த குறைந்தபட்ச ஊதியத்தை பெற உரிமை பெற்றவர்கள் என்றும், தன்னிடம் வேலை செய்யும் ஊழியருக்கு குறைந்தபட்ச ஊதியம் கூட வழங்க முடியாத ஒரு நிறுவனம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும்

தகுதியும் உரிமையும் அற்றது என்பதுடன் அந்நிறுவனம் தொழிற்சாலை நடத்த எந்த நியாயமும் இல்லை என்றும் உச்சநீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பில் தெளிவுபடக் கூறியுள்ளது. இந்திய அரசிலமைப்பு சாசனத்தின்படி தொழிலாளர்களுக்கு வாழ்வூதியம் உறுதி செய்யப் பட்டுள்ளது. உழைக்கும் மக்களின் கௌரவமான வாழ்க்கைத் தரத்திற்கான சமுதாய கட்டமைப்பை உருவாக்க அரசியலமைப்பு சட்டத்தின் 42வது திருத்தம் உறுதி யளித்துள்ளது. தொழிலாளர்கள் அனைவரும் இச்சிறந்த கொள்கையை நம்பிக்கை யோடு எதிர்பார்த்து காத்துக்கிடக்கின்றனர். ஆனால் அடுக்கப்பட்ட உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படும் நாள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியவில்லை.

குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஊதியங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஆனால் இது அத்தி பூத்தாற்போல் எப்போதாவதுதான் நிகழ்கிறது. குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி, சம்பளங்கள் மாற்றியமைக்கப் படவில்லை என்றால் நடப்பில் இருக்கும் ஊதியமே தொடர வேண்டும் என்ற ஷரத்தும் உள்ளது. இது வேலை தருபவர்களுக்கு மிகுந்த சோம்பல்தனத்தை உருவாக்கி விடுவதுடன் தொழிலாளர்களுக்கு அநீதியையும் இழைத்து வருகிறது. இந்த குறைபாட்டை சரிசெய்ய, கிராமப்புற தொழிலாளர் ஆணையம் 1990ம் ஆண்டு மேற்படி சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவும் குறிப்பிட்ட காலவரையில் ஊதிய மாற்றம் செய்யவும், குறைந்தபட்ச ஊதியம் எல்லா 'மாறுபடும் அகவிலைப்படி' யுடனும் (VDA) இணைக்கப்பட வேண்டும் என்றும், நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணின் அடிப்படையில் ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஊதிய ஊயர்வுகள் தன்னிச்சையாக அளிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசுக்கு பரிந்துரைத்தது. ஆனால் இந்த திருத்தம் இதுநாள்வரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும் இந்த அளவீடுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் என்பதுகூட இதுநாள்வரை வழங்கப்படவில்லை என்பதும் ஒரு வேதனையான உண்மை. மேற்கண்ட விதிமுறைகளை கருத்தில் கொண்டு இந்த ஊதிய மாற்றத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், இணைப்பு I அட்டவணையில் கண்டவாறு மாதம் ரூ.26,000 என நிர்ணயிக்க வேண்டும் என்று அலுவலர் குழுவிடம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது. (இணைப்பு I இணைக்கப்பட்டுள்ளது)

❖ அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை பணியிடங்களில் தற்போது பணியாற்றி வரும் அடிப்படை ஊழியர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியமாக ரூ.26,000/- நிர்ணயிக்கப்பட வேண்டும். காலியாக உள்ள அனைத்து அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை ஊழியர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.
❖ தமிழக அரசு ஊழியர்கள் தற்போது பெற்று வரும் ஊதியத்தை இணைப்பு II-ல் கண்டுள்ளபடி 3.7 மடங்கு உயர்த்தி நிர்ணயம் செய்திடல் வேண்டும். இதன்மூலம் அனைவருக்கும் சீரான ஊதிய மாற்றம் கிடைக்கும். (இணைப்பு II இணைக்கப்பட்டுள்ளது)
❖ புதிய ஊதிய விகிதம் 1.1.2016 முதல் அமுல்படுத்தப்பட வேண்டும். 1.1.2016 முதலான நிலுவைத் தொகையினை ரொக்கமாக வழங்கிட வேண்டும். அது வழங்கப்படும் வரையில் 20 சதவீத ஊதியத்தை 1.1.2016ஆம் தேதியிலிருந்து இடைக்கால நிவாரணமாக வழங்க வேண்டும்.
❖ பதவி உயர்வின்போது அடிப்படை விதி 22(பி)ன் கீழ் பதவி உயர்வு பெறும் ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் பணப்பயன் உறுதி செய்யக்கூடிய வகையில் இரண்டு ஊதிய உயர்வு அளித்து அடுத்த நிலையில் (Level ) ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
❖ தேர்வுநிலை, சிறப்புநிலை மற்றும் முதுநிலை ஊழியர்களுக்கு இரண்டு ஊதிய உயர்வு மற்றும் அடுத்த நிலைக்கான ஊதியமும் வழங்கிட வேண்டும்.
❖ தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதியங்கள் ஒழிக்கப்பட்டு தரப்படுத்தப்பட்ட முறையான ஊதிய நிலைகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
❖ தரப்படுத்தப்படாத சிறப்புகாலமுறை ஊதிய விகிதங்களின் கீழ் பணியாற்றிவரும் சத்துணவு/ அங்கன்வாடி/ வருவாய் கிராம உதவியாளர்கள்/ஊராட்சி செயலாளர்கள்/ஊர்ப்புற நூலகர்கள்/தோட்டக்கலை பண்ணை ஊழியர்கள்/வனத்துறை காவலர்கள்/கணினி இயக்குநர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் தரப்படுத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறையுடன் கூடிய நிரந்தரப்பணி மற்றும் வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்துப் பயன்களையும் வழங்கி சிறப்புக் காலமுறை ஊதிய முறைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும்.
❖ அமைச்சுப்பணியாளர் மற்றும் அவர்தம் நிலையில் உள்ளோருக்கு கடந்த ஊதிய மாற்றத்திற்கு முன்பும், பின்பும் உள்ள முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும். அதேபோல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் சென்ற ஊதிய மாற்றத்திற்கு முன்பும், பின்பும் உள்ள முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
❖ மத்திய அரசுப் பணியில் உள்ளவாறே கல்வித்தகுதியும், பணித்தன்மையும் உள்ள பல்வேறு பதவிகளுக்கு கடந்த ஊதியக்குழுவில் மத்திய அரசு ஊழியர்க்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் விடுபட்டு போயுள்ளது. இப்பிரிவினருக்கு மத்திய அரசு ஊழியர்க்கு இணையான ஊதியம் வழங்கப்படவேண்டும்.

- பட்டப்படிப்பு முடித்த இளநிலை உதவியாளர்களுக்கு இடுஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்,
- மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சதவீத அடிப்படையிலான வீட்டு வாடகைப்படி, போக்குவரத்துப்படி, மற்றும் கல்விப்படி உள்ளிட்ட அனைத்துப்படிகளும் தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.
- வீட்டு வாடகைப்படியாக சென்னை மாவட்டம் 30 சதவீதம், இதர மாநகராட்சிகளுக்கு 25 சதவீதம், மாவட்டத் தலைநகரங்களுக்கு 20 சதவீதம் மற்றும் இதர அனைத்து பகுதிகளுக்கும் 10 சதவீதம் வழங்கப்பட வேண்டும்.
- அரசு வாடகை குடியிருப்புகளில் உள்ள ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படியைத் தவிர கூடுதலான பிடித்தம் எதுவும் கூடாது.
- மருத்துவப்படியாக மாதந்தோறும் ரூ.1000/- , குழந்தைகளின் கல்விப்படி, போக்குவரத்துப்படி, சீருடைப்படி, சலவைப்படி. மலைவாழ்படி, குளிர்காலப்படி, ஆபத்துப்படி, திட்டப்படி, பயணப்படி மற்றும் மாறுதல்படி உள்ளிட்ட இதர படிகள் அனைத்தும் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்கிட வேண்டும்,
- ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியன மத்திய அரசு வழங்குவதுபோல் வழங்கிட வேண்டும்,
- முழு ஓய்வூதியம் பெற தகுதி வாய்ந்த பணிக்காலமாக 20 ஆண்டுகாலம் என நிர்ணயித்திட வேண்டும்.
- ஓய்வூதியத் தொகுப்பு (commutation) தொகைக்கான வட்டித்தொகை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும். மேலும் 2001க்கு முன் இருந்தவாறு 40 சதமான தொகுப்புத் தொகை வழங்கிட வேண்டும்.
- அரசுத் துறைகளில் காலியாக உள்ள லட்சக்கணக்கான பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலையில் அப்பணிகளை கூடுதல் பணியாகப் பார்த்து வரும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் காலியிடங்கள் நிரப்பப்படும் வரை கூடுதல் பொறுப்புப் படி வழங்கிட வேண்டும்.
- தமிழக மக்களுக்கான நலத்திட்டங்களை முழுமையாக காலதாமதமின்றி நிறைவேற்றிட மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் விதமாக, தற்போது அரசுத்துறைகளில் காலியாகவுள்ள லட்சக்கணக்கான பணியிடங்களை தாமதமின்றி நிரப்பிட பரிந்துரை செய்திட வேண்டும்.
- அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது தற்போது உள்ள 58 வயதாகவே தொடர வேண்டும்,
- உள்ளாட்சி நிறுவன ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து அரசுக் கருவூலத்தின் மூலம் ஊதியம் வழங்குவது உள்ளிட்ட அரசு ஊழியர்கள் பெறும் அனைத்து சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- மத்திய அரசில் இல்லாத சில ஊதிய விகிதங்கள் தமிழகத்திலும், தமிழகத்தில் இல்லாத சில ஊதிய விகிதங்கள் மத்திய அரசிலும் உள்ள நிலையில், தற்போது மத்திய அரசு அறிவித்துள்ள ஒரே மாதிரியான சம்பள அணி (Pay Matrix) தமிழகத்திற்கு பொருந்தாது. எனவே இதுபோன்ற பணிப்பிரிவினருக்கு ஊதிய நிர்ணம் செய்யும்போது பதவி உயர்வுக்கு ஏற்ற ஊதிய நிலை (Level) நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- அமைச்சுப் பணியாளர்களது ஊதியத்தில் சமச்சீர் நிலைமை பாதுகாக்கப்பட வேண்டும். உச்சநீதி மன்றம் மற்றும் நிர்வாகத் தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புகளின்படி புதிய ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- பதிவறை எழுத்தர்/பதிவறை உதவியாளர் பணியிடங்கள் அனைத்தும் இளநிலை உதவியாளர்காளக தரம் உயர்த்தப்பட்டு அதன்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேணடும்.
- தற்போதுள்ள காலமுறை ஊதிய உயர்வு முறை தொடரப்பட வேண்டும். ஓய்வுபெறும் நிலையில் உள்ளோர் இறுதியாக 6 மாதம் பணிபுரிந்திருந்தால் உடனே ஒரு ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.
- அரசு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். தற்போதைய திட்டத்திலுள்ள குறைபாடுகளை சரிசெய்து கட்டணமில்லா சிகிச்சை உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெறுவதற்கான மருத்துவமனைகளின் பட்டியலில் அரசு மருத்துவமனைகளையும் இணைத்திட வேண்டும்.
- அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வருமான உச்சவரம்பின்றி ஒரு மாத ஊதியத்தை போனஸாக வழங்கிட வேண்டும்.
- விடுப்புகால பயணச்சலுகையாக ஆண்டுக்கு ஒரு முறை சொந்த ஊருக்கும், 4 ஆண்டுக்கு ஒருமுறை இந்தியாவின் எந்தவொரு பகுதிக்கும் சென்று திரும்ப ஆகும் செலவுகள் அனைத்தும் ஈடுகட்டும் வகையில் விடுப்புகால பயணச்சலுகை வழங்கப்பட வேண்டும்.
- வீடுகட்ட முன்பணம் 100 மாத சம்பளம் அல்லது ரூ.50 லட்சம் வழங்கப்பட வேண்டும்.
- திருமண முன்பணம் மகனுக்கு ரூ.1 லட்சமாகவும், மகளுக்கு ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்பட வேண்டும்.
- பண்டிகைகால முன்பணமாக ரூ.10,000/-மும், மோட்டார் சைக்கிள்/கார் வாங்க முன்பணமாக வாகனத்தின் முழுவிலையும் வழங்கப்பட வேண்டும்.
- கல்வி முன்பணமாக பள்ளிகள்/கல்லூரிகள் செலுத்தக் கோரும் தொகையை முழுவதுமாக வழங்க வேண்டும்.
- மத்திய அரசு வழங்குவது போல் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பாக இரண்டு குழந்தைகள் வரை, ஒவ்வொரு குழந்தைக்கும் தலா 270 நாட்கள் தமிழக அரசும் வழங்குகிறது. அதேபோல் மத்திய அரசு அனுமதித்துள்ளது போல் பெண் அரசு தமிழக ஊழியர்களும் குழந்தைகளை 18 வயதுவரை கவனிப்பதற்காக ஒரு குழந்தைக்கு ஓராண்டு வீதம்

இரண்டு குழந்தைகள் வரை சிறப்பு விடுப்பு எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். இச்சலுகை தத்தெடுக்கப்படும் குழந்தையை பராமரிப்பதற்கும் வழங்கப்பட வேண்டும்.

- ❖ பெண் ஊழியர்களுக்கு காலை/மாலை ஒரு மணி நேரம் சிறப்பு அனுமதி வழங்குவது, அலுவலக வளாகங்களில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்துவது, பெண் ஊழியர்களுக்கு அரசே மகளிர் தங்கும் விடுதி ஏற்படுத்துவது மற்றும் கணவன் மனைவி ஒரே ஊரில் பணி நியமனம் செய்யப்படுவது ஆகியவை செய்துதரப்பட வேண்டும்.
- ❖ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் அனைத்துத் துறைவாரிச் சங்கங்களையும் அலுவலர் குழு அழைத்துப் பேச வேண்டும்.
- ❖ ஊதிய அலுவலர் குழு பரிந்துரையினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை ஈடுகட்ட மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற வேண்டும்.
- ❖ ஒரு ஊழியரின் 30 ஆண்டுகள் பணிக்காலத்தில் அவருக்கு 5 பதவி உயர்வுகள் 8, 15, 21, 26 மற்றும் 30 ஆண்டுகளில் வழங்க வேண்டும். திறமையின் அடிப்படையில் பதவி உயர்வு என்று பரிந்துரை செய்துள்ள ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையை நிராகரிக்க வேண்டும். தேர்வின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுபவர்கள் அப்பணியிடத்திற்கு புதியவர்களாக கருதப்பட வேண்டும்.
- ❖ ஆண்டு ஊதிய உயர்வு தொகையினை 5 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். பதவி உயர்வில் ஊட்டுப் பணிநிலையில் (Feeder Category) பெற்றுவந்த ஊதியத்துடன் 2 ஊதிய உயர்வுகள் வழங்க வேண்டும்.

**பொது**

பூபேந்திரநாத் ஹசாரிகா மற்றும் ஒருவர் - எதிர் - அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் பலர் [2013(2) SCC 516 Para 53] என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் ஒரு நல்லாட்சி அரசாங்கம் அதன் ஊழியர்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூறியுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

''மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஒரு முன்மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும், எதிர்காலத்தில் ஊழியர்களின் உரிமைகோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும், பொறுப்பில்லாத அலட்சியப் போக்குடன் பெரிய அளவில் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும், ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் நம்பிக்கை நீர்த்துப்போகும் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையும், மதிப்பும் மகிமையும் வாய்ந்தது. அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றத்தில் சதுரங்க விளையாட்டு ஆடக்கூடாது. அமைதி உணர்வும், சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவவேண்டும். ஊழியர்கள் அனைவரும் தாங்கள் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும், தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்றும் நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற கருத்துப்படிமம் உறுதிப்படும்.''

அரசு ஊழியர்கள் அனைவரும் இந்த அரசை மேற்கூறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே நம்பி வருகிறோம். அரசும் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலித்து அவர்களின் கோரிக்கைகளை மொத்தமாக இல்லாவிடினும் கூடுமான அளவில் நிறைவேற்றும் சூழல் ஏற்படவேண்டும் என்று விரும்புகிறோம். ஆப்போதுதான் அரசு நிர்வாகமும், மக்கள் திட்டப்பணிகளும் தொய்வின்றி நடக்கும், சமூகத்தில் நலமும் வளமும் செழிக்கும்.

மேலும், இன்றைய உலகமயமாக்கல் சூழலில் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வு, பணவீக்கம் ஆகியவற்றை அரசுஊழியர்களுக்கான ஊதியமாற்றம் மேலும் அதிகரிக்கும் என்று ஊடகங்களில் உண்மைக்கு மாறான கருத்து திணிப்பு பரவலாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மத்திய அரசின் தவறான பெருளாதார கொள்கைகளும், நிதிப்பங்கீடும் மாநில அரசுகள் நிதிப்பற்றாக்குறையை எதிர்கொள்ளும் நிலைமைக்கு ஆட்படுத்தியுள்ளன. அரசுஊழியர்களுக்கான ஊதியச் செலவு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கான முதலீட்டுச் செலவு என்ற அடிப்படையில் ஊதிய மாற்றத்திற்கான செலவுகளை ஈடுகட்டுவதற்கு மத்தியஅரசிடமிருந்து கூடுதலான நிதி ஒதுக்கீட்டை மாநில அரசு பெறுவதற்கான நிர்வாகம் மற்றும் அரசியல் ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

மாநில அரசுகளுக்கான மத்தியஅரசின் நிதிப் பங்கீடு மற்றும் மத்திய நிதி ஆணைக்குழுவின் நிதி ஒதுக்கீடு ஆகியவை குறித்து அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் முன்வைத்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் இத்திசைவழியிலான நடவடிக்கைகளுக்கு எமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முழுமையாக துணை நிற்கும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இணைப்பு I

| மத்திய 7வது ஊதியக்குழு நிர்ணயத்தின்படி 01.01.2016 அன்றைய குறைந்தபட்ச ஊதியக் கணக்கீடு | | | | | | உள்ளூர் விலை மதிப்பீடு (தமிழகம்) | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | விவரம் | நாளொன்றுக்கு 1நபருக்கு நுகர்வு (PCU) | மாதம் ஒன்றிற்கு 3 அலகுகளுக்கான நுகர்வு [(3)x3x30] | விலை/அலகு (நடுவண் அரசு) (கிலோ ஒன்றுக்கு) | செலவினம் (நடுவண் அரசு) | விலை/அலகு (தமிழகம்) (கிலோ ஒன்றுக்கு) | செலவினம் (தமிழகம்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | அரிசி/கோதுமை (கி.கி) | 0.475 | 42.750 | 25.93 | 1108.51 | 46.00 | 1966.50 |
| 2 | பருப்பு வகைகள் (கி.கி) | 0.080 | 7.200 | 97.84 | 704.45 | 116.00 | 835.20 |
| 3 | மூல காய்கறிகள் (கி.கி) | 0.100 | 9.000 | 58.48 | 526.32 | 121.00 | 1089.00 |
| 4 | பச்சை காய்கறிகள் (கி.கி) | 0.125 | 11.250 | 38.12 | 428.85 | 79.00 | 888.75 |
| 5 | பிற காய்கறிகள் (கி.கி) | 0.075 | 6.750 | 32.80 | 221.40 | 68.00 | 459.00 |
| 6 | பழங்கள்(கி.கி) | 0.120 | 10.800 | 64.16 | 692.93 | 120.00 | 1296.00 |
| 7 | பால் (லிட்.) | 0.200 | 18.000 | 37.74 | 679.32 | 40.00 | 720.00 |
| 8 | சர்க்கரை/வெல்லம் (கி.கி) | 0.056 | 5.040 | 37.40 | 188.50 | 42.00 | 211.68 |
| 9 | சமையல் எண்ணெய் (கி.கி) | 0.040 | 3.600 | 114.02 | 410.47 | 136.00 | 489.60 |
| 10 | மீன் (கி.கி) | | 2.500 | 268.38 | 670.95 | 330.00 | 825.00 |
| 11 | இறைச்சி (கி.கி) | | 5.000 | 400.90 | 2004.50 | 500.00 | 2500.00 |
| 12 | முட்டை (எண்ணிக்கை) | | 90 | 4.27 | 384.30 | 4.00 | 360.00 |
| 13 | சோப்பு | | | | 291.31 | | 420.00 |
| 14 | துணி வகைகள் / ஆடைகள் (மீ.) | | 5.50 | 164.88 | 906.84 | 217.00 | 1193.50 |
| 15 | மொத்தம் (1-14) | | | | 9217.99 | - | 13254.23 |
| 16 | எரிபொருள், மின்சாரம், தண்ணீர் கட்டணங்கள் [(15):(16) = 80:20] | | | | 2304.50 | - | 3313.55 |
| 17 | (15)/0.80 | | | | 11522.49 | - | 16567.78 |
| 18 | திருமணம், கேளிக்கை மற்றும் பண்டிகை போன்றவை,[(17):(18) = 85:15] | | | | 2033.38 | - | 2923.72 |
| 19 | (17)/0.85 | | | | **13555.87** | - | **19491.50** |
| 20 | திறன்மேம்பாட்டிற்கு சேர்க்க 25% to (19) | | | | 3388.97 | - | 4872.87 |
| 21 | (19) + (20) | | | | **16944.84** | - | **24364.37** |
| 22 | வீட்டு வசதி [(21):(22) = 97:3] | | | | 524.07 | - | 753.53 |
| 23 | (21)/0.97 | | | | 17468.91 | - | 25117.90 |
| 24 | 1.1.2016 முதல் அகவிலைப்படி125% உயர்த்தப்பட்ட நிலையில் வ.எண் 23க்கு 3% உயர்வு | | | | 524.07 | - | 753.53 |
| 25 | **01.01.2016 அன்று இறுதியான குறைந்தபட்ச ஊதியம் (23) + (24)** | | | | 17992.98 | - | 25871.43 |
| 26 | **வ.எண் 25-ன் பின்னத்தை ரூ.100க்கு சுழித்தபின் ஊதியம்** | | | | **18000.00** | - | **25900.00** |

***(மத்திய 7ஆவது ஊதியக்குழு அறிக்கையின் 81–83ம் பக்கங்களைக் காண்க)*

# இணைப்பு II

| வ.எண் | 1.1.2016 முதல் மத்திய அரசு அமல்படுத்தியுள்ள புதிய ஊதிய விகிதம் | | | | | | | | தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழக அரசிடம் முன் வைக்கும் ஊதிய விகிதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஊதியக்கட்டு | ஊதிய விகிதம் | தர ஊதியம் | அடிப்படை ஊதியம் | துவக்க ஊதியம் | மாற்றுக் காரணி | புதிய அடிப்படை ஊதியம் | ஊதிய நிலை | ஊதியக்கட்டு | ஊதிய விகிதம் | தர ஊதியம் | அடிப்படை ஊதியம் | துவக்க ஊதியம் | மாற்றுக் காரணி | புதிய அடிப்படை ஊதியம் |
| 1 | | | | | | | | | PB 1A | 4800-10000 | 1300 | 6100 | **7000** | 3.7 | **26000** |
| 2 | | | | | | | | | ,, | 4800-10000 | 1400 | 6200 | **7000** | 3.7 | **26000** |
| 3 | | | | | | | | | ,, | 4800-10000 | 1650 | 6450 | **7000** | 3.7 | **26000** |
| 4 | PB 1 | 5200-20200 | 1800 | 7000 | 7000 | 2.57 | **18000** | 1 | PB 1 | 52200-20200 | 1800 | 7000 | 7000 | 3.7 | **26000** |
| 5 | ,, | 5200-20200 | 1900 | 7100 | 7730 | 2.57 | **19900** | 2 | ,, | 5200-20200 | 1900 | 7100 | 7730 | 3.7 | **28600** |
| 6 | ,, | 5200-20200 | 2000 | 7200 | 8460 | 2.57 | **21700** | 3 | ,, | 5200-20200 | 2000 | 7200 | 8460 | 3.7 | **31300** |
| 7 | | | | | | | | | ,, | 5200-20200 | 2200 | 7400 | **9185** | 3.7 | **34000** |
| 8 | ,, | 5200-20200 | 2400 | 7600 | 9910 | 2.57 | **25500** | 4 | ,, | 5200-20200 | 2400 | 7600 | 9910 | 3.7 | **36700** |
| 9 | | | | | | | | | ,, | 5200-20200 | 2600 | 7800 | **10635** | 3.7 | **39300** |
| 10 | ,, | 5200-20200 | 2800 | 8000 | 11360 | 2.57 | **29200** | 5 | ,, | 5200-20200 | 2800 | 8000 | 11360 | 3.7 | **42000** |
| 11 | PB 2 | 9300-34800 | 4200 | 13500 | 13500 | 2.62 | **35400** | 6 | PB 2 | 9300-34800 | 4200 | 13500 | 13500 | 3.7 | **50000** |
| 12 | | | | | | | | | ,, | 9300-34800 | 4300 | 13600 | **14410** | 3.7 | **53300** |
| 13 | | | | | | | | | ,, | 9300-34800 | 4400 | 13700 | **15320** | 3.7 | **56700** |
| 14 | | | | | | | | | ,, | 9300-34800 | 4450 | 13750 | **15775** | 3.7 | **58400** |
| 15 | | | | | | | | | ,, | 9300-34800 | 4500 | 13800 | **16230** | 3.7 | **60100** |
| 16 | ,, | 9300-34800 | 4600 | 13900 | 17140 | 2.62 | **44900** | 7 | ,, | 9300-34800 | 4600 | 13900 | 17140 | 3.7 | **63400** |
| 17 | | | | | | | | | ,, | 9300-34800 | 4700 | 14000 | **17645** | 3.7 | **65300** |
| 18 | ,, | 9300-34800 | 4800 | 14100 | 18150 | 2.62 | **47600** | 8 | ,, | 9300-34800 | 4800 | 14100 | 18150 | 3.7 | **67200** |
| 19 | | | | | | | | | ,, | 9300-34800 | 4900 | 14200 | **19215** | 3.7 | **71100** |
| 20 | | | | | | | | | ,, | 9300-34800 | 5100 | 14400 | 20280 | 3.7 | **75000** |
| 21 | | 9300-34800 | 5400 | 14700 | 20280 | 2.62 | **53100** | 9 | | | | | | | |
| 22 | PB 3 | 15600-39100 | 5400 | 21000 | 21000 | 2.67 | **56100** | 10 | PB 3 | 15600-39100 | 5400 | 21000 | 21000 | 3.7 | **77700** |
| 23 | | | | | | | | | ,, | 15600-39100 | 5700 | 21300 | **21785** | 3.7 | **80600** |
| 24 | | | | | | | | | ,, | 15600-39100 | 6000 | 21600 | **22570** | 3.7 | **83500** |
| 25 | ,, | 15600-39100 | 6600 | 22200 | 25350 | 2.67 | **67700** | 11 | ,, | 15600-39100 | 6600 | 22200 | 25350 | 3.7 | **93800** |
| 26 | ,, | 15600-39100 | 7600 | 23200 | 29500 | 2.67 | **78800** | 12 | ,, | 15600-39100 | 7600 | 23200 | 29500 | 3.7 | **109200** |
| 27 | | | | | | | | | ,, | 15600-39100 | 7700 | 23300 | **37800** | 3.7 | **139900** |
| 28 | PB 4 | 37400-67000 | 8700 | 46100 | 46100 | 2.57 | **118500** | 13 | PB 4 | 37400-67000 | 8700 | 46100 | 46100 | 3.7 | **170600** |
| 29 | | | | | | | | | | 37400-67000 | 8800 | 46200 | **47600** | 3.7 | **176100** |
| 30 | ,, | 37400-67000 | 8900 | 46300 | 49100 | 2.67 | **131100** | 13 A | ,, | 37400-67000 | 8900 | 46300 | 49100 | 3.7 | **181700** |
| 31 | ,, | 37400-67000 | 10000 | 47400 | 53000 | 2.72 | **144200** | 14 | ,, | 37400-67000 | 10000 | 47400 | 53000 | 3.7 | **196100** |

©
Government of Tamil Nadu
2017

MANUSCRIPT SERIES

# FINANCE [PGC-I] DEPARTMENT

## G.O.No.52, Dated 2nd March 2017.

*(Thunmugi, Maasi-18, Thiruvalluvar Aandu-2048)*

**ABTRACT**

**COMMITTEE** - Expert Committee Constituted to Examine the Demand for Continuing Old Pension Scheme – Extension of Term of the Expert Committee – Orders – Issued.

**Read:**

1. G.O.Ms.No.65, Finance (PGC) Department, dated 26.02.2016.
2. G.O.Ms.No.220, Finance (PGC) Department, dated 28.07.2016.
3. G.O.Ms.No.289, Finance (PGC) Department, dated 14.11.2016.

-oOo-

**ORDER:**

The Expert Committee, initially Constituted with four months term vide Government order first read above and last continued upto 25.12.2016 in Government order third read above, needs more time to finalise its report.

**2.** The Government now direct that the term of the Expert Committee be extended further by three months from 26.12.2016, so as to enable the Committee to finalise its report.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

## அலுவலர் குழு, ஊதிய மாற்றத்திற்கான கோரிக்கை சாசனத்தை அனுப்பக் கேட்டு, அரசு ஊழியர் சங்கத்திற்கு அனுப்பிய கடிதம்

Official Committee,
Finance Department,
Secretariat,
Chennai - 600 009.

**Letter No. 11026 / O.C / 2017-1, Dated: 13-- 03 --2017**

From
**Thiru K.Shanmugam, I.A.S,**
Chairman / Additional Chief Secretary to Government.

To
Tamil Nadu Government Employee's Association,
No.46, Theradi Theru,
Triplicane, Chennai—600 005.

Sir / Madam,

Sub : Official Committee constituted to examine the revision of Pay scales / Pension to the State Government employees and pensioners – Submission of Representations / Memoranda to the Committee – Regarding.

Ref: G.O.Ms.No.40, Finance (Pay Cell) Department, dated: 22-02-2017.

********

I am directed to state that Government has constituted an Official Committee to examine and make necessary recommendations for the implementation of the revision of scales of pay and allowances of State Government Employees and Teachers, revision of pension, family pension and retirement benefits based on the decisions of the Central Government on the recommendations of the Seventh Central Pay Commission and the High Level Committee constituted by Government of India. The abovesaid Official Committee constituted by the State Government has been directed to submit its report by 30-06-2017. While evaluating the issue, the Committee would like to hear the views of the bodies representing the employees and hence your valuable opinion is being sought in this regard.

2. Considering the short duration available for the Official Committee, I am to request you to send your Representations / Memoranda directly to the Official Committee on or before 31-03-2017 by post.

Yours faithfully,

for Chairman / Additional Chief Secretary
to Government.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம் - ஒரு பார்வை

## இந்திய தணிக்கைத் தலைவர்

இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். இந்திய அரசியலமைப்புச் சட்ட சுயேச்சை அமைப்புகளில் இவர் மட்டுமே "அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் அதன் சட்டங்களுக்கும் விசுவாசமாக இருப்பதாகவும், நாணயமாகக் கடைபிடிப்பதாகவும்" உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார். இவர் சுதந்திரமாக செயல்படுவதறம், ஆட்சித் துறையின் அத்துமீறல் களிலிருந்து விடுபடுவதற்கும் அரசியல் அமைப்புச் சட்டம் சில சிறப்பு விதிகளை வகுத்துள்ளது.

இவரது பணிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். இவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால், உச்ச நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்வதற் கான முறையை பின்பற்ற வேண்டும். இவரது ஊதியம் உச்ச நீதிமன்ற நீதிபதியின் ஊதியத்துக்கு சமமானது.

கணக்காய்வுத் துறை, தணிக்கைத் துறை இரண்டுக்கும் இவர் தலைவராக இருப்பார். இந்திய தொகுப்பு நிதியிலிருந்து மத்திய, மாநில அரசுகள் எடுக்கும் தொகைக்கு சரியான கணக்கு வைத்துள்ளார்களா? நிதி முறையாக செலவிடப் படுகிறதா? வரவு-செலவு கணக்குப் பதிவேடுகள் சட்டப்படி பராமரிக்கப்படுகிறதா? என்பதை கவனிப்பார். மத்திய, மாநில அரசுகளின் வரவு-செலவு கணக்குகளை தணிக்கை செய்வார். மத்திய, மாநில உதவி பெறும் அமைப்புகளின் கணக்கு களையும் தணிக்கை செய்வார்.

மத்திய அரசு தணிக்கை அறிக்கையை குடியரசுத் தலைவரிடமும், மாநில அரசு தணிக்கை அறிக்கையினை ஆளுனரிடமும் வழங்குவார். இவ்வறிக்கைகளை முறையே பாராளுமன்றமும், சட்டமன்றமும் பரிசீலிக்கும். நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவிற்கு ஆலோசகராகவும், வழிகாட்டுபவராகவும் செயல்படுவார். தணிக்கை தலைவருக்கு சட்ட அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதில் டாக்டர் அம்பேத்கர் உறுதியாக இருந்தார்.

## தேசிய மனித உரிமைகள் ஆணையம்

மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும். மனித மதிப்பு மதிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் பறிக்கப்பட முடியாதவை என்ற கோட்பாடுகளின் வழியில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.

கீழ்க்கண்டவற்றை இந்த ஆணையம் செயல் படுத்தும். 1. மனித உரிமைகளை நடைமுறைப் படுத்தும் நிறுவனங்களை பலப்படுத்துதல் 2. மனித உரிமை மீறல்களை செயல் சுதந்திரத் தோடு பரிசீலித்தல் 3. மனித உரிமைகளை நிலைநாட்டும் முயற்சிகளுக்குத் துணையாக இருந்து பாதுகாத்துப் பலப்படுத்துதல். மத்திய மாநில அரசுகள் தனித்தனியே இந்த ஆணை யத்தை அமைத்துள்ளன.

5 உறுப்பினர்கள் கொண்ட இந்த ஆணையத் தில் 3 உறுப்பினர்கள் உயர்நிலை நீதிமன்ற அனுபவம் உடையவராக இருப்பார்கள். ஆணையத்தின் தலைவர் உச்ச நிதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பிற உறுப்பினர்கள் உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்ற நீதிபதிகளாக இருப் பார்கள்.

இவர்களை நியமனம் செய்ய 6 பேர் கொண்ட குழு குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யும். அதன் அடிப்படையில் குடியரசுத் தலைவர் ஆணைய உறுப்பினர்களை நியமனம் செய்வார். குழுவின் உறுப்பினர்கள் 1. பிரதமர் 2. நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் 3. மாநிலங்களவைத் துணைத் தலைவர் 4. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் 5. மாநிலங்களவை எதிர் கட்சித் தலைவர் 6. மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோர் ஆவர். ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள்.

இந்த ஆணையத்திற்கு நீதிமன்றங்களுக்கு உரியவாறே அனைத்து அதிகாரங்களும் கொடுக் கப்பட்டுள்ளன. மாநில அரசின் அனுமதியோடு எந்த சிறைச்சாலைக்கும் சென்று மனித உரிமை மீறப்பட்டுள்ளதா என விசாரிக்கலாம்.

மனித உரிமை மீறல் பற்றிய விசாரணைக்கு மத்திய மாநில அரசுகளிடம் இருந்து தகவல் மற்றும் அறிக்கைகளை பெறலாம். இதற்கு மத்திய மாநில புலனாய்வுத் துறை அதிகாரிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். மனித உரிமைகளை மீறும் அரசு அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க மத்திய மாநில அரசுகளுக்கு பரிந்துரை செய்யலாம். பாதிக்கப்பட்டவர்களுக்கு

இடைக்கால நிவாரணம் வழங்க அரசுக்கு சிபாரிசு செய்யலாம்.

இந்த ஆணையத்தின் நடவடிக்கையின் காரணமாக குழந்தைகள் திருமணத்தை தடுக்க முடிந்துள்ளது. குழந்தைகளை வேலையில் அமர்த்துவதை தடுக்க முடிந்துள்ளது. பெண்களுக்கு பாலியல் தொல்லை தருபவர்கள், விபச்சாரத்தில் ஈடுபடுத்துபவர்கள், பாலியல் வன்கொடுமை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிந்திருக்கிறது. பட்டியலிடப்பட்ட வகுப்பினரின் மனித உரிமை மீறல்களில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை நிலை நாட்ட முயற்சிகள் செய்ய முடிந்திருக்கிறது. இருந்தும் மனித உரிமைகளை மீறும் நபர் மீது நேரிடையாக இந்த ஆணையம் தண்டனை வழங்க முடியாது. மத்திய மாநில அரசுகளுக்கு சிபாரிசு மட்டுமே செய்யலாம்.

## தீர்ப்பாயங்கள்

அரசு ஊழியர்களின் பிரச்சனைகளை கவனிக்க அமைக்கப்பட்டதாகும். பணி சம்பந்தமாக அரசுக்கும் ஊழியர்களுக்கும் ஏற்படும் தகராறுகள், பிரச்சனைகளை தீர்த்து வைக்க உதவியாக இருக்க அமைக்கப்பட்டது இந்த தீர்ப்பாயங்கள்.

இவற்றை நீதிமன்றம் மூலம் தீர்த்து வைக்க முன்பு ஊழியர்கள் அணுக வேண்டியது இருந்தது. நீதிமன்ற விதிமுறைகள், காலதாமதம், செலவு ஆகியவை அரசு ஊழியர்களுக்கு கஷ்டமாக இருந்தது. இவற்றை தீர்க்க மாற்று முறை தேவைப்பட்டதால் இந்த தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன. அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது இந்த தீர்ப்பாயங்கள் பற்றி அதில் கூறப்படவில்லை. 1976-ல் செய்யப்பட்ட சட்டத் திருத்தம் மூலம் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன. மொத்தம் 3 வகை தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன. 1. மத்திய நிர்வாக தீர்ப்பாயம் 2. மாநில நிர்வாக தீர்ப்பாயம் 3. பிற தீர்ப்பாயம்.

மத்திய தீர்ப்பாய உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். மாநில தீர்ப்பாய உறுப்பினர்களை மாநில ஆளுநர் ஆலோசனைப் படி குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார்.

ஊழியர்களின் பணி நியமனம், பணியில் ஏற்படும் பிரச்சனைகளை இந்த தீர்ப்பாயம் கவனத்தில் கொண்டு பிரச்சனைகளை தீர்த்து வைக்கும். நீதிமன்ற முறைப்படி அல்லாமல் குறைந்தகால அவகாசத்தில் குறைந்த செலவில் தீர்வு காண உதவுகிறது இது.

தமிழ்நாட்டில் செயபட்டு வந்த தீர்ப்பாயங்கள் தற்போது செயல்படாமல் உள்ளன. தீர்ப்பாயத்தை செயல்பட வைக்க மாநில அரசு எந்த அக்கறையும் காட்டவில்லை. ஊழியர்கள் மீண்டும் உயர் நீதிமன்றத்தை அணுக வேண்டிய நிலையில் உள்ளனர்.

அண்மையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் காத்திருக்கும் போராட்டம் நடத்தியபோது அரசுக்கு வைக்கப்பட்ட கோரிக்கைகளில் மாநில தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் உள்ளது. போராட்ட முடிவில் தமிழக அரசு இதனை ஏற்றுக்கொண்டு தீர்ப்பாயம் அமைக்க ஒப்புக் கொண்டுள்ளது.

**- நெல்லை ஆறுமுகம்**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழு பங்கேற்கும்**

# காலவரையற்ற

# வேலை நிறுத்தப் போராட்டம்

**ஏப்ரல் 25, 2017 முதல்**

**புறப்படு தோழா! புயலென! உரிமைகளை மீட்டெடுப்போம்!**

# மகளிர் தின கருத்தரங்கங்கள்

## நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம சார்பில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் 08.03.17 மாலை நாகை அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கலா வரவேற்புரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பா.ராணி அறிக்கை சமர்ப்பித்தார். மகளிர் துணைக்குழு உறுப்பினர் களை அறிமுகப்படுத்தியும் தீர்மானங்களை முன்மொழிந்து உரையாற்றினார்.

திராவிட மகளிர் பாசறை மாநிலச் செயலாளர் கோ.செந்தமிழ்ச்செல்வி “சமூக மாற்றத்தில் பெண்களின் பங்கு” என்ற தலைப்பில் கருத்துரை யாற்றினார். இறுதியாக மாவட்டத் தணிக்கை யாளர் சி.வாசுகி நன்றி கூறினார்.

## கிருஷ்ணகிரி

சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 08.03.2017 அன்று மாலை 5 மணி அளவில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் கே.நாகரத்னா தலைமையேற்றார். டி.ஜெயந்தி வரவேற்றார். மாவட்டத் தலைவர் பி.சந்திரன் துவக்கவுரையாற்றினார். மாதர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.ராசாத்தி “ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால்...” என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். எஸ்.கே.தனலட்சுமி நன்றி கூறினார். கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் 14.3.2017 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட மகளிர் துணைக் குழுவின் அமைப்பாளர் க.திவ்யா தலைமை தாங்கினார். மகளிர் துணைக்குழுவின் நிர்வாகி ஜெ.மகேஷ்வரி வரவேற்றார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தி.கலைசெல்வி “பணித்தளத்தில் பெண்கள் நிலை” குறித்து கருத்துரை வழங்கினார். சங்கத்தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன், மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், பொருளாளர் எஸ். காந்திமதிநாதன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மகளிர் துணைக்குழு உறுப்பினர் பி.சரஸ்வதி நன்றி கூறினார். இதில் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை

மதுரை மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் மதுரை கிழக்கு, மேற்கு பஞ்சாயத்து யூனியன் வளாகத்தில் 8.3.2017 அன்று மாவட்டத் தலைவர் மு.முருகன் தலைமையில் நடை பெற்றது. மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். மாநில மகளிர் துணைக் குழு உறுப்பினர் ஆர்.பாண்டியம்மாள் வரவேற்றார். மாவட்ட துணைக் குழு அமைப்பாளர் ஆர்.நூர்ஜகான் அறிக்கை சமர்ப்பித்தார்.

மகளிர் துணைக் குழுவின் மாவட்ட அமைப்பாளராக ஏ.அமுதா (சத்துணவு), துணை அமைப்பாளராக மீனாட்சி (வணிக வரித் துறை) ஆகியோருடன் 15 பேர் கொண்ட மாவட்ட துணைக் குழு தேர்வு செய்யப்பட்டது. இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் அகில இந்திய இணைச் செயலாளர் எம்.கிரிஜா “சங்கத்தில் சங்கமிப்போம்” என்ற தலைப்பில் கருத்துரை யாற்றினார். மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். இதில் பங்கேற்ற அனைவருக்கும் எழுத்தாளர் பிரமிளா கிருஷ்ணன் எழுதிய “பெண்ணே உனக்கே உனக்காக” என்ற நூல் வழங்கப்பட்டது. நிறைவாக ஆணையாளர் ஆயிசா நன்றி கூறினார். இதில் 150 பெண் ஊழியர்கள் உட்பட 170 பேர் பங்கேற்றனர்.

## கரூர்

11.3.2017 அன்று மாவட்ட மையத்தின் சார்பில் சிறப்பு மகளிர் கருத்தரங்கம் மாவட்டத் தலைவர் எம்.மகாவிஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் வரவேற் றார். மகளிர் அமைப்பாளர் எஸ்.விஜயலட்சுமி சிறப்புரையாற்றினார். சாந்தி (வணிகவரி), பிரேமா, மேனகா (கல்வி), மணிமேகலை, அகிலாண்டேஸ்வரி, லலிதா (ஊரக வளர்ச்சி), ரமணி, மாலதி, கலைச்செல்வி (சத்துணவு), முருவாயி (வேளாண்மை), மாவட்ட நிர்வாகிகள்

தாமோதரன், பாலகிருஷ்ணன், சிவகாமி, வட்டச் செயலாளர் விஜயகுமார், பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மணிமேகலை நன்றி கூறினார்.

### தென் சென்னை

*17.3.2017* அன்று மாவட்ட மையத்தின் சார்பில் சேப்பாக்கம் ஆவின் பாலகம் முன்பு மகளிர் தின விழா நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் உ.சுமதி தலைமையேற்றார். ஆதி திராவிட நலத் துறையை சேர்ந்த அஜய்லா மோசஸ் வரவேற்றார். மாநில மகளிர் துணைக் குழு உறுப்பினர் என்.மணிமாலா, மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங் ஆகியோர் வாழ்த்தி பேசினர். அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி கருத்துரை வழங்கினார். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் எம்.சுதா நன்றி கூறினார். இதில் 220 பெண்கள் உட்பட 270 பேர் பங்கேற்றனர்.

### காஞ்சிபுரம்

*25.3.2017* அன்று மதுராந்தகத்தில் மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் ஆர்.பாலசுகாம்பாள் வரவேற்றார். அமைப்பாளர் எம்.பி.திலகம் துவக்கவுரை யாற்றினார். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் டி.உமாமகேஸ்வரி, கே.பூங்குழலி ஆகியோர் கருத்துரையாற்றினர். டி.சுமதி தீர்மானங்களை முன்மொழிந்தார். மாநிலச் செயலாளரும், மகளிர் துணைக் குழு உறுப்பின ருமான தி.கலைச்செல்வி நிறைவுரையாற்றினார். பி.சித்ரா நன்றி கூறினார். இதில் 50 பெண்கள் உட்பட 70 பேர் பங்கேற்றனர். ❖

---

# ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம்

**த**மிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களின் காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தும், மத்திய அரசு ஊழியர்களின் ஒருநாள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தும், தமிழக நிதி நிலை அறிக்கையில் ஊதிய மாற்றத்திற்கு நிதி ஒதுக்கப்படாதது மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்கப்படாததைக் கண்டித்தும் 16.3.2016 அன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### நாகை

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் கண்டன மற்றும் ஆதரவு ஆர்ப்பாட்டம் மதிய உணவு இடைவேளையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார்.



### தென் சென்னை

சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகை முன்பு சைதை-நந்தனம் பகுதிக் குழு செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க நிர்வாகி அரங்க திருமால் வரவேற்றார். மாவட்ட துணைத் தலைவர் உ.சுமதி வாழ்த்தி பேசினார். மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன் சிறப்புரையாற்றினார். பகுதிக் குழு இணைச்செயலாளர் இராஜசேகரன் நன்றி கூறினார். இதில் 100 பெண்கள் உட்பட 200 பேர் பங்கேற்றனர்.

### மதுரை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் மு.முருகன் தலைமையில் ஆர்ர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சு.கிருஷ்ணன் விளக்கவுரையாற்றி னார். கிழக்கு வட்டக்கிளை செயலாளர் கே.நீதிராஜா, துறைவாரி சங்க நிர்வாகிகள்

எஸ்.நடராஜன், சந்திரசேகரன் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் 120 பேர் பங்கேற்றனர்.

அதே நாளில் உசிலம்பட்டியில் மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.பாண்டியம்மாள் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 22 பெண்கள் உட்பட 45 பேர் கலந்து கொண்டனர். அன்று மாலை தெற்கு வட்டக் கிளை சார்பில் திருநகர் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் டான்சாக் மாநிலத் தலைவர் கனகராஜ் சிறப்புரையாற்றினார்.

### விழுப்புரம்

கள்ளக்குறிச்சி வட்டக்கிளை சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வட்டத் தலைவர் டி.சுந்தர்பாபு தலைமையில் நடைபெற்றது. செயலாளர் வி.ரங்கசாமி விளக்கவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் வெங்கடேசன், ஆர்.வடிவேல், ஜி.சீனிவாசன், வெள்ளத்துரை, பாண்டியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்டத் தலைவர் வி.நாகராஜன், மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கம், பொருளாளர் பி.ரவி உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். ஊரக வளர்ச்சித் துறையின் நிர்வாகி வீரபத்திரன் நன்றி கூறினார்.

### நீலகிரி

கூடலூரில் வட்டச் செயலாளர் சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 15 பெண்கள் உட்பட 60 பேரும், குன்னூரில் வட்ட பொருளாளர் ஜெர்சோம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 35 பெண்கள் உட்பட 90 பேரும், உதகையில் வட்டத் தலைவர் குமாரராஜா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 60 பெண்கள் உட்பட 300 பேரும் கலந்து கொண்டனர்.

### தருமபுரி

அரசு மருத்துவ கல்லூரி முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்துக்கு கிளைத் தலைவர் பன்னீர் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், மாவட்ட துணைத் தலைவர் யோகராசு, கிளைச் செயலாளர் சாமிநாதன், நிர்வாகிகள் சிவராமன், கோவிந்தராஜ் ஆகியோர் பேசினர். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். ❖

## எய்ட்ஸ் கண்ட்ரோல் சொசைட்டி ஊழியர்கள் மீது அடக்குமுறை நடவடிக்கை எடுத்த இயக்குநரை கண்டித்து தமிழகம் முழுவதும் அரசு ஊழியர் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டம்

எய்ட்ஸ் திட்டத்தில் தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் ரூ. 19500 மாத சம்பளத்தில் பணிபுரியும் எய்ட்ஸ் கண்ட்ரோல் சொசைட்டி ஊழியர்களின் கோரிக்கைகளை தீர்க்கக் கோரி போராட்டம் நடத்திய மாவட்ட, மாநில நிர்வாகிகள் 72 பேரை தமிழகம் முழுவதும் மாறுதல் செய்தும், பணிநீக்கம் செய்தும் உத்திரவிட்டுள்ள அதன் இயக்குநர் சி.நடராசன் இ.ஆ.ப அவர்களை கண்டித்து 6.3.2017 அன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

### நாகை

மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன்



விளக்கவுரையாற்றினார். சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.கலைச்செல்வன் நிறைவுரையாற்றினார். பல்வேறு சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார்.

### கோவை

எய்ட்ஸ் கட்டுப்பாட்டு இயக்குநர் அவர்களின் ஊழியர் விரோத போக்கை கண்டித்து கோவை மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



## திருச்சி

திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட தலைவர் டி.இளங்கோவன் தலைமையில் அரசு ஊழியர் சங்கத்தின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் எம்.கென்னடி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். வணிகவரித் துறை அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஜி. லட்சுமணன் வாழ்த்துரை வழங்க, அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் ஏ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாவட்ட பொருளாளர் எம். பழனியப்பன் நன்றி கூறினார்.



## காஞ்சிபுரம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சா.முகம்மது உசேன் கோரிக்கை விளக்கவுரை நிகழ்த்தினார். எம்.என்.ஸ்ரீராம் (மாநில தலைவர் கண்மருத்துவ உதவியாளர் சங்கம்), கே.பூங்குழலி (மாநில துணைத் தலைவர், கிராம சுகாதார செவிலியர் சங்கம்), ஜி.வெங்கடேசன் (மாவட்டத் தலைவர், கிராம உதவியாளர் சங்கம்), கே.இராமச்சந்திரன் (மத்திய செயற்குழு உறுப்பினர், வருவாய்த் துறை அலுவலர் சங்கம்), பி.சார்லஸ் சசிக்குமார் (மாவட்டச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம்), எம்.பி திலகம் (மாவட்ட அமைப்பாளர், மகளிர் துணைக் குழு), விக்டர் சுரேஷ் குமார் (வட்டச் செயலாளர், காஞ்சிபுரம்), பி.இராமமூர்த்தி (மாவட்டத் தலைவர், சத்துணவு ஊழியர் சங்கம்), எம்.தாமோதரன் (மாநில பொதுச் செயலாளர், நகராட்சி,மாநகராட்சி ஊழியர் சங்கம்) ஆகியோர் கண்டனவுரை நிகழ்த்தினர். ஒய்.சீத்தாராமன் (மாவட்டச் செயலாளர், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம்) நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் ராஜ்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

## கிருஷ்ணகிரி

மாவட்டத் தலைவர் பி.சந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சி.பி.ஜெயராமன் விளக்கவுரையாற்றினார். துறைவாரிசங்க தலைவர்கள் எம்.கிருஷ்ணன் (நெடுஞ்சாலைத் துறை), வி.தேவராஜ் (சத்துணவு), எம்.பெர்னாட் (அங்கன்வாடி), பி.பெருமாள் (வருவாய்த் துறை), பி.சேரலாதன் (எ.க.அ.ச.) ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில தணிக்கையாளர் ஆர்.நடராஜன் சிறப்புரையாற்றினார். கிருட்டிணகிரி வட்டச் செயலாளர் எ.மணி நன்றி கூறினார். இதில் 18 பெண் ஊழியர்கள் உட்பட 126 பேர் பங்கேற்று கண்டன குரல் எழுப்பினர்.

## கரூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையேற்றார். செயலாளர் கெ.சக்திவேல் விளக்கவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் சி.விஜயகுமார் வாழ்த்தி பேசினார். மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிர மணியன் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் என்.சந்திரன், துறைவாரி சங்க நிர்வாகிகள் இரா.செல்வம், கோ.லட்சுமணன், கே.இளங்கோ, இரா.நாராயணன், பி.பிரகாஷ், ஆர்.பிரேம்குமார், ஆ.சங்கர், பி.பழனிச்சாமி, பாலசுப்பிரமணியன், தங்கபாண்டியன் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார்.

## மதுரை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைவர் மு.முருகன் தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் விளக்கவுரையாற்றினார். மருந்தாளுநர் சங்க மாநில பொதுச் செயலாளர் அ.பால்முருகன் உட்பட பல்வேறு துறைச்சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.வேலுமணி நன்றி கூறினார்.

## நீலகிரி

மாவட்ட கருவூலத் துறை அருகில் மாவட்டத் தலைவர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஆஸரா விளக்கவுரையாற்றினார். வட்டத் தலைவர் அய்யனார், மூர்த்தி, உதகை வட்டத் தலைவர் ஜெயக்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர். விஸ்வநாதன் நன்றி கூறினார். ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## வேளாண் துறை அமைச்சுப் பணியாளர் சங்கம்

07.03.17 அன்று வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளரின் அமைச்சுப் பணியாளர்களுக்கு எதிரான விதிமீறல்களை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் உதவி செயற் பொறியாளர், நாகை (குமரன் மண்டபம்) அலுவலகம் முன்னால் மதியம் 1.30 மணிக்கு மாவட்டத் தலைவர் எஸ்.கோவிநதராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எம்.தமிழரசன் விளக்கவுரையாற்றினார். அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, அரசுப் பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.அரவிந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாநில தணிக்கையாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். இறுதியாக செயற்குழு உறுப்பினர் கே.சிவபுண்ணியம் நன்றி கூனினார்.

## நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர்கள் சங்கம்

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர்கள் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட பேரவை கூட்டம் மார்ச் 18 அன்று திருவள்ளூர் வட்டாச்சியர் வளாகத்தில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பு செயலாளர் கே.மோகன்தாஸ் வரவேற்றார். பொருளாளர் எம்.மணி அஞ்சல் தீர்மானத்தை வாசித்தார். சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பி.கோதண்டபாணி துவக்கவுரையாற்றினார். துணை நிர்வாகிகள் எம்.சீனிவாசன், ஏ.ரவி, வருவாய் துறை அலுவலர்கள் சங்க மாவட்ட தலைவர் ஆர்.பாண்டுரங்கன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன், மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில பொதுச் செயலாளர் மா.பாலசுப்பிரமணியன் நிரையுறையாற்றினார். உட்கோட்ட தலைவர் கோதண்டன் நன்றி கூறினார்.

சங்கத்தின் மாவட்ட தலைவராக ஆர்.ஜீவானந்தம், மாவட்ட செயலாளராக கே.மோகன்தாஸ், பொருளாளராக ஜி.அகஸ்டின் மாவட்ட துணைத் தலைவராக ஏ.ரவி, மாவட்ட துணைச் செயலாளராக என்.ஜஸ்டின் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



## மாநகர சுகாதார செவிலியர் சங்கம்

அரசு ஆணையை செயல்படுத்தி கிராம சுகாதார செவிலியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது போல் பெருநகர சென்னை மாநகராட்சியிலும் நகர சுகாதார செவிலியர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 2.3.2017 அன்று சென்னை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகையில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத்



தலைவர் ஜெ.சரஸ்வதி தலைமையேற்றார். மாநில துணைத் தலைவர் ஏ.திலகம் வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் சு.பார்த்திபன் துவக்கவுரையாற்றினார். சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.சுதா கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி, வடசென்னை மாவட்டத் தலைவர் எம்.அந்தோணிசாமி, தென் சென்னை மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவர் சங்கத்தின் தலைவர் டாக்டர் சி.டி.சாந்தி, நகராட்சி நிர்வாக ஆணையக அனைத்து ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கி.இரகுராமன், பெருநகர சென்னை மாநகராட்சி மருந்தாளுநர் சங்கத்தின் செயலாளர் ப.ஆறுமுகம், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் நல சங்கத்தின் தலைவர் டி.பாலகுரு, த.நா.அ.பகுதி சுகாதார செவிலியர் சங்கத்தின் தலைவர் எஸ்.செந்தமிழ்செல்வி, பெ.செ.மா. செங்கொடி சங்கத்தின் பொதுச் செயலாளர் பா.சீனிவாசலு, பெ.செ.மா.மலேரியா தொழிலாளர் சங்கத்தின் தலைவர் என்.மாயகிருஷ்ணன், பெ.செ.மா. பகுதிக் குழுவின் பொருளாளர் சி.ஜீவன், பெ.செ.மா வருவாய்த் துறையின் வரி வசூலிப்பாளர் சங்கத்தின் செயலாளர் எஸ்.ருக்மாங்கதன், தேசிய அஞ்சல் ஊழியர் சங்கத்தின் பொருளாளர் ஆர்.வெங்கடரமணி மற்றும் 15 மண்டலங்களிலுள்ள சுகாதார செவிலியர் சங்கத்தின் மண்டலத் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் நிறைவுரையாற்றினார். சங்க மாநில பொருளாளர் சி.சித்ரா நன்றி கூறினார்.

## அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்

நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் 23.03.17 அன்று மாலை ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைவர் எஸ்.இராமநாத கணேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கிராம சுகாதார செவிலியர் சங்க மாநிலச் செயலாளர் பா.ராணி, புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் ப.அந்துவன் சேரல், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, சிஐடியு தலைவர் எஸ்.ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் சிறப்புரையாற்றினார். மருந்தாளுநர் சங்க மாநிலச் செயலாளர் ஜி.பைரவநாதன் நிறைவுரையாற்றினார். துணைத் தலைவர் என்.ஜி.பாஸ்கரன் நன்றி கூறினார். ❖

## வாலாஜாபாத் புதிய வட்டக் கிளை உதயம்



காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் வட்டக் கிளையில் அரசு ஊழியர் சங்கத்தின் புதிய வட்டக் கிளை 25.3.2017 அன்று கொடியேற்ற நிகழ்ச்சியுடன் தொடங்கியது. மாவட்டத் தலைவர் வெ.லெனின் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியினையும், மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் அரசு ஊழியர் சங்கக் கொடியையும் ஏற்றி வைத்தனர். வட்டத் தலைவர் விக்டர் சுரேஷ் வரவேற்றார். வட்டத் தலைவர் குமார் மற்றும் துறைவாரி சங்க நிர்வாகிகள் ஆர்.துரைசாமி, இ.வரதராஜன், கே.ஜெயக்குமார், எம்.பி.திலகம், எஸ்.ரஞ்சிட் சிங், பி.ராமமூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதில் 21 பெண்கள் 54 பேர் பங்கேற்றனர்.

புதிய வட்டக் கிளை நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக பாலு, துணைத் தலைவர்களாக ஜெயக்குமார், திருமாறன், வட்ட செயலாளராக ஜெகஜீவன்ராம், இணைச் செயலாளர்களாக பட்டு, வேதபுரி, பொருளாளராக சார்லஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.